


ISSN: 2582–5518

புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




சனி ❖ நவம்பர். 18, 2023 — சென்னை & புதுக்கோட்டை — 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 44 ❖ ரூ.10

### அரசு போக்குவரத்துக் கழக தற்காலிக ஊழியர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம்

# உத்தரவு

## மதுரை அரசு போக்குவரத்து கழகத்தில் பணிபுரியும் அனைத்து தற்காலிக பணியாளர்களுக்கும் நிவாரணம் வழங்கவேண்டும்; உயர் நீதிமன்றம்



மதுரை , நவ. 18–

அரசு போக்குவரத்துக் கழக அனைத்து தற்காலிக ஓட்டுநர், நடத்துநர், தொழில்நுட்ப பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதிய சட்டத்தின் கீழ் ஊதியம் வழங்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மதுரைகோட்ட அரசு போக்குவரத்து கழக தொழிலாளர்கள் சங்க பொதுச் செயலாளர் ஏ.கனகசுந்தர், உயர் நீதிமன்ற கிளையில் தாக்கல் செய்த மனு: மதுரை கோட்ட அரசு போக்குவரத்து கழகத்தில் 500 தற்காலிக ஓட்டுநர், நடத்துநர்கள், தொழில்நுட்ப பணியாளர்கள் உள்ளனர். இவர்களுக்கு குறைந்தபட்ச ஊதிய சட்டத்தில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள ஊதியத்தை விட குறைந்த ஊதியம் வழங்கப்படுகிறது. இதனால் தற்காலிக ஓட்டுநர், நடத்துநர், தற்காலிக பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் மற்றும் 1.4.2019 முதல் ஊதிய நிலுவை வழங்க உத்தரவிட வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதி பட்டு தேவானந்த் முன்பு விசாரணைக்கு வந்தது. மனுதாரர் சார்பில் வழக்கறிஞர் ஏ.ராகுல் வாதிடுகையில், பொது வாகன போக்குவரத்துதுறையில் பணிபுரிபவர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் வழங்குவது தொடர்பாக தமிழக அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை 31.12.2018–ல் அரசாணை பிறப்பித்துள்ளது. இந்த அரசாணையை விட குறைவாகவே ஊதியம் வழங்கப்படுகிறது. இதனால் குறைந்தபட்ச ஊதியம் மற்றும் ஊதிய நிலுவை தொகை வழங்க உத்தரவிட வேண்டும் என்றார்.

இதையடுத்து நீதிபதி பிறப்பித்த உத்தரவில் அரசு போக்குவரத்து கழகத்தில் குறைந்தபட்ச ஊதிய சட்டம் அமல்படுத்தாமல் இருப்பதை ஏற்க முடியாது. அரசு போக்குவரத்து கழகத்தில் பணிபுரியும் தற்காலிக ஊழியர்கள் 31.12.2018–ல் அரசு பிறப்பித்துள்ள அரசாணை மற்றும் 18.3.2019–ல் ஏற்பட்ட உடன்படிக்கை அடிப்படையில் குறைந்தபட்ச ஊதியம் பெற தகுதியானவர்கள்.

அரசுதரப்பில்தற்காலிக பணியாளர்களுக்கு போனஸ், பேட்டா, உணவு சலுகை, இலவச பேருந்து பயண அட்டை வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சலுகைகள் தற்காலிக ஊழியர்களுக்கு வழங்கப்படும் குறைந்தபட்ச சம்பள விகிதத்துக்குள் வராது. எனவே மதுரை அரசு போக்குவரத்து கழகத்தில் பணிபுரியும் அனைத்து தற்காலிக ஓட்டுனர்கள், நடத்துநர்கள், தொழில்நுட்ப பணியாளர்களுக்கு, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அரசாணை மற்றும் 2019 உடன்படிக்கை அடிப்படையில் குறைந்தபட்ச ஊதியம் மற்றும் 1.4.2019 முதல் ஊதிய நிலுவை தொகையை 8 வாரத்தில் வழங்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவில் கூறியுள்ளார்.

### உத்தராகண்ட் சுரங்கப் பாதை விபத்து

## 100 மணி நேரத்துக்கும் மேலாக சிக்கித் தவிக்கும் தொழிலாளர்கள்



டேராடூன், நவ. 18–

உத்தராகண்டில் சில்க்யாரா - பர்கோட் இடையே அமைக்கப்பட்டு வந்த 4.5 கி.மீ. தொலைவு சுரங்கப்பாதையில் மண் சரிந்து ஏற்பட்ட விபத்தில் சிக்கியுள்ள 40 தொழிலாளர்களை மீட்கும் பணிகள் 6–வது நாளாக நேற்றும் தொடர்ந்தது. இந்த நிலையில், 100 மணி நேரத்துக்கும் அதிகமாக உள்ளே சிக்கியிருக்கும் தொழிலாளர்களின் உடல் மற்றும் மனநிலை குறித்த கவலை அதிகரித்துள்ளது.

கடந்த 12–ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணிக்கு சுரங்கத்தில் மண் சரிவு ஏற்பட்டது. இவர்களை மீட்கும் பணிகளில் 200–க்கும் மேற்பட்ட நிபுணர்கள் இரவுபகலாக ஈடுபட்டுள்ளனர். சுரங்கப்பாதையில் சிக்கியிருப்பவர்கள் 100 மணி நேரத்துக்கு மேலாக உள்ளே சிக்கியிருப்பதால் அவர்களின் மனம் மற்றும் உடல்நிலை குறித்த கவலை அதிகரித்துள்ளது. இதனிடையே இந்திய விமானப்படைக்குச் சொந்தமான, சி–130 ஜெ விமானம் மூலம் கொண்டுவரப்பட்ட அதிநவீன செயல்திறன் கொண்ட துளையிடும் இயந்திரம் நேற்று முன் தினம் வியாழக்கிழமை நிறுவப்பட்டது மீட்பு பணிகளில் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. நேற்று காலை வரை இடிபாடுகளில் 21 மீட்டர்கள் வரை தோண்டப் பட்டுள்ளதாகதகவல்கள் தெரிவிக்கின்றன.

சிக்கியிருக்கும் தொழிலாளர்களை மீட்க இன்னும் 60 மீட்டர்கள் மட்டுமே தோண்டப்பட வேண்டும்,அதன்பின்னர் தொழிலாளர்கள் வெளியேற 900 மில்லி மீட்டர், 800 மில்லி மீட்டர் விட்டமுள்ள குழாய்களை ஒன்றன்பின் ஒன்றாக உள்ளேசெலுத்த வேண்டும். இதற்கிடையில் சிக்கியிருக்கும் தொழிலாளர்கள் பாதுகாப்பாகவும் நலமாகவும் இருக்கிறார்கள். அவர்களுக்கு குழாய்களின் மூலம் உணவு, தண்ணீர் மருந்து பொருள்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. தொழிலாளர்களின் மன உறுதியை தக்கவைக்கும் வகையில் தொடர்ந்து அவர்களுடன் தகவல்தொடர்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறதுஎன்றுஉத்தர்காசி மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

சம்பவ இடத்தில் ஆறு படுக்கைகள் கொண்ட தற்காலிக சுகாதார வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் சிக்கியிருக்கும் தொழிலாளர்கள் வெளியேற்றப்படும் போது அவர்களுக்கு சிகிச்சை அளிக்க மருத்துவர்களுடன் 10 ஆம்புலன்ஸ்களில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே, கிரிக்கெட்வீரராகஇருந்து அரசியல்வாதியாக மாறியுள்ள ஹர்பஜன் சிங், தொழிலாளர்களை மீட்கும் பணிகளில் உத்தராகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமியின் தனிப்பட்ட தலையீடு வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். அவர் தனது எக்ஸ் பக்கத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வெளியிட்டுள்ள பதிவில், "உத்தராகண்ட் சுரங்கத்தில் ஏற்பட்ட விபத்தில் தொழிலாளர்கள் சுரங்கத்துக்குள் சிக்கி கிட்டத்தட்ட 100 மணி நேரங்கள் கடந்துவிட்டது. அத்தொழிலாளர்களின் நலனுக்காகவும் அவர்கள் விரைவாகமீட்கப்படவும் நான் இறைவனை வேண்டுகிறேன்.

நாடே விழாக்கள் மற்றும் உலகக்கோப்பைக் கொண்டாட்டத்தில் இருக்கும் போது அந்தத் தொழிலாளர்களின் குடும்பத்தினர் கவலையில் உள்ளனர். அவர்களை மீட்க அனைத்து வழிமுறைகளையும் நாம் பயன்படுத்த வேண்டும். அந்தத் தொழிலாளர்களை மீட்டு அவர்களின் குடும்பத்தினரின் முகங்களில்புன்னகையை பூக்கச்செய்ய மீட்பு நடவடிக்கைகளில் மாநில முதல்வர் புஷ்கர் சிங் தாமி ஜி தனிப்பட்ட முறையில் தலையிட வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

### விவசாயிகள் மீது குண்டாஸ்

## அதிமுக போராட்டத்தை முன்னெடுக்கும் என்கிறார் இபிஎஸ்



சென்னை, நவ. 18–

திருவண்ணாமலையில் விவசாயிகள் மீது போடப்பட்ட குண்டர் சட்டத்தை அரசு உடனே ரத்து செய்ய வேண்டும் இல்லையென்றால் அதிமுக சார்பில் மிகப்பெரிய போராட்டம் முன்னெடுக்கப்படும் என தமிழக எதிர்கட்சி தலைவரும், அதிமுக பொதுச்செயலாளருமான எடப்பாடி கே.பழனிசாமி தமிழகஅரசுக்குஎச்சரிக்கை விடுத்துள்ளார்.

திருவண்ணாமலையில் சிப்காட் அமைக்கஎதிர்ப்பு தெரிவித்து போராடி வரும் விவசாயிகளில் 7 பேர் மீது குண்டர் சட்டம் பாய்ந்துள்ளது. இது விவசாயிகளிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள நிலையில், விவசாயிகள் மீதான குண்டர்சட்டத்தைஉடனே ரத்துசெய்யவேண்டுமென எடப்பாடியார் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ''சிப்காட் தொழிற்பூங்கா அமைக்க நிலங்களை கையகப்படுத்த பிறப்பிக்கப்பட்ட அரசாணையை ரத்து செய்ய வேண்டும் என்றும், வேளாண் விளை நிலங்களை கையகப்படுத்தக் கூடாது என்றும், அப்பகுதிகளில் வசிக்கும் விவசாயப் பெருங்குடி மக்கள் கடந்த சில மாதங்களாக அறப்போராட்டம் நடத்தி வருகின்றனர். அவர்களின் நியாயமான கோரிக்கைகளைவலியுறுத்தி கடந்த 4.10.2023 அன்று, அதிமுகசார்பில்மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இந்த நிலையில், போராட்டத்தில் பங்கெடுக்கும் விவசாயிகளுடைய தீவிரத்தைக் குறைக்க வேண்டும் என்றும், அவர்களுடைய ஆர்ப்பாட்டத்தை ஒடுக்க வேண்டும்என்றும், அந்தப் பகுதிகளில்இருக்கக்கூடிய இளைஞர்கள் மீதும், விவசாயப் பெருங்குடி மக்கள்மீதும்விடியாதிமுக அரசுதொடர்வழக்குகளை பதிவு செய்துள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த வழக்குகளைக் காரணம் காட்டி, எந்தவிதமான முன்வழக்குகளும்இல்லாத விவசாயிகள் மீது தொடர் வழக்குகளைப் பதிவு செய்துள்ளதோடு,அவர்கள் பொது அமைதிக்கு குந்தகம் விளைவிப்பார்கள் என்ற காரணத்தைக் காட்டி, தற்போது7விவசாயிகள் மீது குண்டர் தடுப்புக்காவலை இந்த விடியா திமுக அரசு போட்டிருக்கிறது.

மேல்மா கூட்டு ரோடு, கூழமந்தல் போன்ற பகுதிகள் போர்க்களம் போல் காட்சி அளிக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், இந்தியா–பாகிஸ்தான் எல்லையில்போட்டிருக்கக் கூடிய முள் வேலிகளைப் போல, அங்கே முள் வேலிகளைக் கொண்டுவந்து தடுப்புகளை அமைத்து, பெரும் கலவரத்தை கட்டுப்படுத்தக்கூடிய வஜ்ரா வாகனங்களை யெல்லாம் கொண்டுவந்து நிறுத்தி, விவசாயப் பெருங்குடி மக்களின் போராட்டத்தை கட்டுப்படுத்த இந்த அரசு முயல்கிறது.

அரசியல் எதிரிகளை பழிவாங்குவதற்கும், அரசு ஊழியர்களின் நியாயமான போராட்டங்களை ஒடுக்குவதற்கும், தங்கள் விவசாய நிலங்கள் பறிபோய்விடுமோ என்ற அச்சத்தில் வேளாண் பெருங்குடி மக்கள் நியாயமான அகிம்சை வழியில் போராடி வருவதை ஒடுக்குவதற்கும், விடியா திமுக அரசு காவல் துறையை தொடர்ந்து பயன்படுத்தி வருவது கடும் கண்டனத்திற்குரியது.

விவசாயப் பெருங்குடி மக்கள் 7 பேர் மீதான குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தை உடனடியாக விடியா திமுக அரசு திரும்பப் பெற வேண்டும். இல்லையெனில், விவசாயிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் அவர்களுக்கு ஆதரவாக, அதிமுக போராட்டத்தை முன்னெடுக்கும் என்று எச்சரிக்கிறேன்'' என குறிப்பிட்டுள்ளார்.

## ஆலங்குடியில் திமுக இளைஞர் அணி வாகனப் பேரணி அமைச்சர் மெய்யநாதன் தலைமையில் வரவேற்பு



ஆலங்குடி,நவ.18–

சேலத்தில்நடைபெறும் இரண்டாவது இளைஞர் அணி மாநில மாநாட்டில் தமிழகம் முழுவதும் கன்னியாகுமரியில் இருந்து 188 மோட்டார் சைக்கிள்களில் பேரணி துவங்கப்பட்டது. 234 தொகுதிகளிலும் 8647 கிலோ மீட்டர் பயணம் செய்கின்றனர். இவர்களுக்கு 504 இடத்தில் வரவேற்பு வழங்கப்படுகிறது. அதன் ஒரு பகுதியாக புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தொகுதியில் சுப்பிரமணியபுரம், கீரமங்கலம், கொத்தமங்கலம் வழியாக ஆலங்குடிக்கு வருகைதந்த இளைஞரணியின் இருசக்கர வாகன பேரணியை தமிழ்நாடு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன் தலைமையில் திமுகவினர் திரளாக வரவேற்றனர்.

நிகழ்ச்சியில் திருவரங்குளம் மேற்கு ஒன்றியச் செயலாளர் தங்கமணி, தெற்கு ஒன்றியச் செயலாளர் அருவடிவேல், கிழக்கு ஒன்றிய செயலாளர் ரவி, ஆலங்குடி பேரூராட்சித் தலைவர் ராசி முருகானந்தம், ஆலங்குடி நகரச் செயலாளர் பழனிக்குமார், துணைச் செயலாளர் செங்கோல், கவுன்சிலர்கள் சஷ்டி முருகன், சையது இப்ராகிம், கிருஷ்ணமூர்த்தி, கருணாநிதிமற்றும்மாவட்ட ஒன்றிய நகர கிளை கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## ஆட்சியர் அலுவலகத்தில் காஃபி வித் கலெக்டர் நிகழ்ச்சி ஆர்வமுடன் பங்கேற்ற அரசுப் பள்ளி மாணவிகள்



புதுக்கோட்டை, நவ. 18–

புதுக்கோட்டை ஆட்சியர் அலுவலகத்தில் காஃபி வித் கலெக்டர் நிகழ்ச்சியில் பங்கேற்ற அரசு பள்ளி மாணவிகள் மாவட்ட ஆட்சியர் மெர்சிரம்யாவுடன் தேநீர் அருந்தி உரையாடினர்.

ஆட்சியருடன் உரையாடியது கனவுகளை அடையமுடியும் என்ற நம்பிக்கையை அளித்ததாக மாணவிகள் தெரிவித்துள்ளனர். புதுக்கோட்டை கிராம புறங்களில் உள்ள அரசு பள்ளிகளில் மாணவர்களின்கல்விநிலை மற்றும்அவர்களின்தேவை என்ன என்பதை அறியும் வகையில் ஆகஸ்ட் முதல் மாதந்தோறும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் காஃபி வித் கலெக்டர் நிகழ்ச்சியை ஆட்சியர் மெர்சி ரம்யா நடத்தி வருகிறார்.

அதற்கான நவம்பர் மாதத்திற்கான நிகழ்ச்சியில் ஆவுடையார் கோவில் அரசு மகளிர் உயர்நிலை பள்ளி மற்றும் மணல்மேல்குடி அரசு மகளிர் மேல்நிலை பள்ளியில் படிக்கும் 30 மாணவர்கள் ஆட்சியர் மெர்சிரம்யாவுடன் தேநீர் அருந்தி உரையாடினர். மாணவிகளின் எதிர்கால கனவு குறித்து கலந்துரையாடிய போது மாணவிகள் அனைவரும் தங்கள் விருப்பங்களை தெரிவித்தனர். மாவட்ட ஆட்சியராகவும், மருத்துவராகவும், வழக்கறிஞர் ஆகவும் வர மாணவர்கள் விருப்பம் தெரிவித்தனர். அப்போது மணல்மேல்குடி அரசு மகளிர் மேல்நிலை பள்ளி மாணவி பாத்திமா கனி பிரதமராக வேண்டும் என்று கூறி அசத்தினார்.

மாணவிகள் தங்கள் கனவை எட்டுவதற்கு என்ன படிக்க வேண்டும் என்னென்ன தேர்வுகள் எழுதவேண்டும் என்பன குறித்து எடுத்துரைத்து முயற்சியை தொடர ஆட்சியர் அறிவுரை வழங்கினார். இதேபோல் ஆட்சியர் அலுவலகத்தில் பணியாற்றும் வேறு அதிகாரிகளும் தாங்கள் மேற்கொள்ளும் பணிகள் குறித்து மாணவிகளிடம் எடுத்துரைத்து மகிழ்ந்தனர். ஆட்சியருடன் அமர்ந்து தேநீர் அருந்தி உரையாடியது மிகுந்த மகிழ்ச்சி அளித்ததாக தெரிவித்த மாணவிகள் எதிர்காலத்தில் கனவுகளை நிறைவேற்றி கொள்வதற்கு நம்பிக்கை அளித்துள்ளதாக கூறினர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







## விஜய் மக்கள் இயக்கம் சார்பாக "தளபதி விஜய் நூலகம்" திட்டம் இன்று துவக்கம்



சென்னை : நவ. 18, தளபதி விஜய் மக்கள் இயக்கம் சார்பாக தளபதி விஜய் பயிலகம் திட்டத்தினை தொடர்ந்து மாணவ, மாணவிகள் மற்றும் இளைஞர்கள் பயன்பெறும் வகையில் புத்தக வாசிப்பு திறன் மற்றும் பொதுஅறிவு சிந்தனை வளர்க்கும் நோக்கில் தற்போது முதற்கட்டமாக "தளபதி விஜய் நூலகம்" திட்டம் இன்று காலை 10.35 மணியளவில் செங்கல்பட்டு மேற்கு மாவட்ட தொண்டரணி தலைமை தளபதி விஜய் மக்கள் இயக்கம் சார்பாக தாம்பரம் தொகுதி பாலாஜி நகர் 3-வது தெரு, சிடிஒ காலனி, மேற்கு தாம்பரத்தில் அகில இந்திய பொதுச் செயலாளர் புஸ்ஸி. ஆனந்து துவக்கி வைக்கிறார்.

அதனைத் தொடர்ந்து செங்கல்பட்டு மேற்கு மாவட்ட தலைமை தளபதி விஜய் மக்கள் இயக்கம் சார்பாக பல்லாவரம் தொகுதியில் தாம்பரம் மாநகராட்சி மும்மூர்த்தி நகர் 5-வது தெருவில் "தளபதி விஜய் நூலகம்" திட்டத்தினை துவக்கி வைக்கிறார். அதேபோன்று கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மூன்று இடங்களிலும், அரியலூர், நாமக்கல் மேற்கு, சென்னை கிழக்கு, வடசென்னை கிழக்கு, வடசென்னை வடக்கு இளைஞரணி மற்றும் வேலூர் தொண்டரணி ஆகிய மாவட்டங்களை சேர்த்து 11 இடங்களிலும் தளபதி விஜய் நூலகம் திறக்கப்பட உள்ளது.

மேலும் இரண்டாம் கட்டமாக வருகின்ற 23.11.2023 (வியாழக்கிழமை) அன்று திருநெல்வேலி மாவட்டத்தில் ஐந்து இடங்களிலும், கோவை மாவட்டத்தில் நான்கு இடங்களிலும் ஈரோடு மாவட்டத்தில் மூன்று இடங்களிலும் தென்காசி மாவட்டத்தில் இரண்டு இடங்களிலும் சேலம், புதுக்கோட்டை, கரூர், சிவகங்கை, திண்டுக்கல் மேற்கு, கன்னியாகுமரி மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களை சேர்த்து 21 இடங்களிலும் தளபதி விஜய் நூலகம் திறக்கப்பட உள்ளது.

## மருத்துவர் சுகந்தன் மாரடைப்பால் மரணம் 'ஏழைகளின் நாயகன்' என்று பெயர் பெற்றவர்



சென்னை : நவ. 18, ஏழை எளிய மக்களுக்கு முன்வந்து உதவியதால் ஏழைகளின் நாயகன் என்று பெயர் பெற்றிருந்த மருத்துவர் சுகந்தன் நேற்று காலை மாரடைப்பு காரணமாக மரணமடைந்தார்.

மத்திய சென்னை கிழக்கு மாவட்டம் , பாஜக மருத்துவர் பிரிவு தலைவராகவும் சுகந்தன் விளங்கினார். மருத்துவர் சுகந்தன் மறைவுக்கு பாஜக நிர்வாகிகள் மற்றும் ஆளுநர் ஆர்.என்.ரவி உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர். ஏழை எளிய மக்களிடம் மிகக் குறைவான கட்டணத்திலும், சில தருணங்களில் இலவசமாகவும் சிகிச்சை அளித்த வகையில் மருத்துவர் சுகந்தனை 'ஏழைகளின் நாயகன்' என்று மக்கள் அழைத்தனர்.

குறிப்பாக ஆட்டிசம்பாதித்த குழந்தைகளின் மீட்சிக்காகவும், சிகிச்சைக்காகவும், ஆக்கபூர்வமான முன்னெடுப்புகளை சுகந்தன் மேற்கொண்டிருந்தார். சில தினங்களுக்கு முன்னர் தீபாவளியை முன்னிட்டு சுகந்தன் வழங்கிய மருத்துவக் குறிப்புகள் இப்போதும் இணையத்தில் வலம் வந்தபடி இருக்கின்றன. இந்த சூழலில் நேற்று காலை 7.15 மணியளவில் மாரடைப்பு காரணமாக மருத்துவர் சுகந்தன் மரணமடைந்ததாக பாஜக மருத்துவ அணியின் மாநிலத் தலைவர் டாக்டர் பிரேம் குமார் தெரிவித்துள்ளார்.

ஆளுநர் ஆர்.என். ரவி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் 'டாக்டர் சுகந்தனின் அகால மறைவு மிகுந்த வேதனை அளிக்கிறது. நம்பிக்கையூட்டும் மருத்துவரான அவர், ஆட்டிசம் குழந்தைகளுக்கான சிகிச்சைக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். இந்த துயரமான நேரத்தில் எனது எண்ணங்கள் அவரது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் உள்ளன. 'ஓம் சாந்தி' என தெரிவிக்கப்பட்டுள்ளது.




## கூட்டுறவுத்துறையில் 5,500 பணியிடங்கள் அமைச்சர் சொன்ன தகவல்



சென்னை : நவ. 18,

கூட்டுறவுத்துறை உதவியாளர்கள் பணியிடங்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தவர்களும், செய்யாதவர்களும் விண்ணப்பிக்கலாம் என அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

டிஎன்பிஎஸ்சி மூலம் தேர்வு செய்யப்பட்டு, கூட்டுறவுத்துறைக்கு ஒதுக்கப்பட்ட 32 தேர்வர்களுக்கு சுருக்கெழுத்து தட்டச்சர் மற்றும் தட்டச்சர் பணியாணைகளை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வழங்கினார்.

அதன்பின் அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், "கூட்டுறவுத்துறையில் ஏற்கெனவே 38 மாவட்டங்களில் விற்பனையாளர்கள், கட்டுனர்கள் என 5,500 காலிப்பணியிடங்களை நிரப்ப 4.5 லட்சம் பேர் விண்ணப்பித்து இருந்தனர்.

நேர்முகத் தேர்வுக்கு பிறகு, தகுதியானவர்களுக்கு பணியாணை வழங்கப்பட்டுள்ளது. 36 மாவட்டங்களில் இந்த தேர்வுப்பணிகள் சிறப்பாக நடைபெற்ற நிலையில், விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் குறைகள் காரணமாக, வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

கூட்டுறவு சங்க உதவியாளர்கள் தேர்வு குறித்து பாஜக தலைவர் அண்ணாமலை கேள்வி எழுப்பியுள்ளார். அவர் விவரம் தெரியாமல் கூறியுள்ளார். கூட்டுறவுத் துறையில் பணியாளர்களைத் தேர்வு செய்ய தனிச்சட்டம் உள்ளது. அந்த சட்டப்படியே அனைத்தும் பின்பற்றப்படுகிறது. மாவட்ட வேலைவாய்ப்பு மையம் மூலம் தேர்வு நடைபெறுவதற்கான அறிவிப்புகள் ஒளிவு மறைவின்றி நடைபெறுகிறது.

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 70 லட்சம் பேர் பதிவு செய்திருந்துள்ளனர். அவர்களும் விண்ணப்பிக்கலாம். அவர்கள் மட்டுமல்லாமல் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்யாதவர்களும் கூட இந்த தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம். இதில் எவ்வித தடையும் இல்லை" என்றார்.

### வங்கக் கடலில் உருவானது 'மிதிலி புயல்'

## 9 துறைமுகங்களுக்கு வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை



சென்னை, நவ. 18-

வடமேற்கு வங்கக்கடலில் 'மிதிலி' புயல் உருவானதை குறிக்கும் வகையில் சென்னை, கடலூர் உள்ளிட்ட 9 மாவட்டங்களில் உள்ள துறைமுகங்களால் 2ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றிட வேண்டுமென சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவுறுத்தியுள்ளது.

மத்திய மேற்கு வங்கக் கடலில் நிலைக் கொண்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக வலுபெற்றது. இது ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவே வலுவிழந்து இன்று வங்கதேசத்தில் மோங்லா- கோபுபரா இடையே கரையைக் கடக்கும் என இந்திய வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், வடமேற்கு வங்கக்கடலில் 'மிதிலி' புயல் உருவானதை குறிக்கும் வகையில் சென்னை, கடலூர், நாகப்பட்டினம், எண்ணூர், காட்டுப்பள்ளி, புதுச்சேரி, காரைக்கால், பாம்பன், தூத்துக்குடி ஆகிய 9 துறைமுகங்களில் 2-ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றிட வானிலை ஆய்வு மையம் அறிவுறுத்தியுள்ளது.

ஏற்கெனவே அனைத்து துறை முகங்களிலும் புயல் உருவாகிறது என மீனவர்களுக்கு எச்சரிக்கைவிடும் வகையில் 9-ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. அதேவேளையில் வடமேற்கு வங்கக்கடல் பகுதியில் மீனவர்கள் யாரும் கடலுக்கு செல்ல வேண்டாம் என சென்னை வானிலை ஆய்வு மையம் வலியுறுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## "தமிழக காங்கிரஸ் தலைவராக விருப்பம்" – கார்த்தி சிதம்பரம் எம்.பி



காரைக்குடி : நவ. 18, தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவராக விருப்பப்படுகிறேன் என கார்த்திக் சிதம்பரம் எம்பி தெரிவித்தார்.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே மானகிரி பண்ணை வீட்டில் சிவகங்கை தொகுதி எம்பி கார்த்தி சிதம்பரம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தனது 53-வது பிறந்த நாளை கட்சித் தொண்டர்களுடன் கேக் வெட்டி கொண்டாடினார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழகத்தில் 'இந்தியா' கூட்டணி ஒற்றுமையாக உள்ளது. வரும் மக்களவைத் தேர்தலில் 39 தொகுதிகளிலும் காங்கிரஸ், திமுக கூட்டணி உறுதியாக வெற்றி பெறும். மகாராஷ்டிரா, பிஹாரில் 'இந்தியா' கூட்டணி உறுதியாக உள்ளது. சில மாநிலங்களில் சில சிக்கல்கள் இருக்கின்றன. தற்போதைய 5 மாநில தேர்தல் முடிவுக்குப் பின் பேச்சுவார்த்தை மூலம் கூட்டணி உறுதி செய்யப்படும்.

5 மாநிலத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி கணிசமாக வெற்றிபெறும். ரெய்டு என்பது தேவையில்லாத விஷயம். அளவுக்கு அதிகமாகச் சொத்து வைத்து இருப்பவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பி விசாரணை செய்யலாம். ரெய்டு என்பது ஊடகங்களுக்காகவும் தொலைக்காட்சிக்காகவும் நடத்தப்படும் 'ஷோ' தான். எனக்கு பிசிசிஐ தலைவராகும் வாய்ப்பெல்லாம் கிடையாது, ஆனால், தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவராக விருப்பப்படுகிறேன். நான் விரும்பும் பதவி தமிழக காங்கிரஸ் கட்சி தலைவர் பதவிதான் என்று கார்த்திக் சிதம்பரம் கூறினார்.

## சேலம் அரசு பேருந்தில் டிக்கெட் மறுவிற்பனை செய்த நடத்துநர் பணியிடை நீக்கம்



சேலம் : நவ. 18, சேலத்தில் அரசு பேருந்தில் டிக்கெட் மறுவிற்பனை செய்த நடத்துநர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை சேலத்திலிருந்து சிதம்பரம் சென்ற அரசு பேருந்தில் டிக்கெட் மறுவிற்பனை செய்ததாக புகார் எழுந்தது. சேலத்தில் இருந்து சிதம்பரம் சென்ற அரசு பேருந்தில் தலைவாசல் பகுதியில் ஏறிய பயணி ஒருவருக்கு 2 நூறு ரூபாய் டிக்கெட்கள் 2 பத்துரூபாய் டிக்கெட்டுகள் வழங்கப்பட்டது.

அப்போது தலைவாசல் அருகே உமங்கலம் என்ற பகுதியில் விழுப்புரம் கோட்ட டிக்கெட் பரிசோதகர்கள் பேருந்தில் ஏறி டிக்கெட் பரிசோதனை செய்தபோது அங்கிருந்த பயணிகள் வைத்திருந்த டிக்கெட் ஆனது மறுவிற்பனை செய்யப்பட்டது கண்டறியப்பட்டது. பயணப்பட்டியலில் இல்லாத அந்த தேதியில் இருக்கக்கூடிய டிக்கெட்டுகள் பயணிகளுக்கு விற்பனை செய்யப்பட்டிருப்பது கண்டறியப்பட்டது.

இது தொடர்பான செய்தி வெளியானதை அடுத்து விசாரணை நடத்தியதில் பயணிகளுக்கு போலி டிக்கெட்டுகள் வழங்கப்படவில்லை மாறாக பயணப்பட்டியலில் இல்லாத ஏற்கனவே இதே நடத்துனரால் பயணிகளுக்கு விற்பனை செய்யப்பட்ட டிக்கெட்டுகள் மறு விற்பனை செய்யப்பட்டிருப்பது கண்டறியப்பட்டது. இது தொடர்பாக பேருந்தில் பணியாற்றிய நடத்துனர் நேரு என்பவர் சேலம் கோட்ட போக்குவரத்து கழக பொது மேலாளர் பொன்முடி பணியிடை நீக்கம் செய்து உத்தரவிட்டுள்ளார்.

ஏற்கனவே இந்த டிக்கெட்டுகள் விற்பனை செய்ததை மீண்டும் எப்படி அவர் கைக்கு வந்தது. அதை மீண்டும் எப்படி பயணிகளுக்கு விற்பனை செய்தார் என்ற கோணத்தில் விசாரணையும் நடைபெற்று வருகிறது. போலி டிக்கெட் என்ற விஷயத்தை முற்றிலுமாக போக்குவரத்து கழக அதிகாரிகள் மறுத்துள்ளனர். மறுவிற்பனை செய்த டிக்கெட் என்ற அடிப்படையிலேயே தற்போது நடத்துநர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.



தமிழ் திரையுலகம் சார்பில் நடைபெற உள்ள கலைஞர் நூற்றாண்டு விழாவிற்கு ரஜினி - கமலுக்கு அழைப்பிதழ் கொடுக்கப்பட்டது



பாஜகவில் இருந்து விலகி மல்லிகார்ஜுன கார்கே முன்னிலையில் காங்கிரஸ் கட்சியில் இணைந்தார் நடிகை விஜயசாந்தி ! வரும் நவம்பர் 30ம் தேதி தெலங்கானாவில் ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற உள்ளது.

## "சிவசங்கர் ஆதரவாளர்களை பாஜக விடப்போவதில்லை" பெரம்பலூரில் அண்ணாமலை பேச்சு




அரியலூர் : நவ. 18, அரியலூர் மாவட்டம் செந்துறை அண்ணா நகரிலிருந்து பேருந்து நிலையம் வரை 'என் மண் என் மக்கள்' யாத்திரையை பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை நேற்று முன்தினம் வியாழக்கிழமை மேற்கொண்டார்.

அப்போது அவர் பேசியது: திராவிட மாடல் அரசால் தமிழகம் வளர்ந்துள்ளதாக அக்கட்சியினர் கூறுவது முற்றிலும் பொய். பெரம்பலூர் மாவட்டம் இன்னும் பின்தங்கியே உள்ளது. கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு பெரம்பலூரில் பொருளாதார மண்டலம் அமைக்க திமுக அரசு 3,000 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தியது. ஆனால் இதுவரை அங்கு ஒரு செங்கல்லை கூட நடவில்லை. எனவே, இப்பகுதி வளர வேண்டும் எனில் வரும் மக்களவைத் தேர்தலில் பிரதமர் மோடிக்கு உங்கள் ஆதரவை தர வேண்டும் என்று அண்ணாமலை பேசினார்.

பின்னர், பெரம்பலூர் பாலக்கரை பகுதியில் யாத்திரையை தொடங்கிய அண்ணாமலை, காமராஜர் வளைவு பகுதியில் நிறைவு செய்தார். அங்கு அவர் பேசியது: திமுக அமைச்சர்கள் 11 பேர் மீது ஊழல் வழக்குகள் உள்ளன. இங்குள்ள திமுகவினரில் கொள்ளையடிப் பதில் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவரில்லை. பெரம்பலூர் ஆட்சியர் அலுவலகத்தில் கல் குவாரி ஏலம் எடுக்கச் சென்ற பாஜக நிர்வாகிகளை தாக்கிய அமைச்சர் சிவசங்கர் ஆதரவாளர்களை பாஜக விடப்போவதில்லை.

உப்புத் தின்றவர்கள் தண்ணீர் குடித்தே ஆக வேண்டும். உங்கள் நாட்கள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இன்னும் சில மாதங்கள் பொறுத்திருந்து பாருங்கள். தான் செல்லும் இடங்களில் எல்லாம் தமிழுக்கு மிகுந்த மரியாதை கொடுப்பவர் பிரதமர் மோடி. 11-வது இடத்திலிருந்த நாட்டின் பொருளாதாரத்தை 5-வது இடத்துக்கு முன்னேற்றியவர் மோடி. வரும் நாடாளுமன்ற தேர்தலில் அவரது கரத்தை வலுப்படுத்துங்கள் என்று அண்ணாமலை பேசினார்.

அவருடன், பாஜக மாநில பொதுச் செயலாளர் கருப்பு முருகானந்தம், பட்டியல் அணி தலைவர் தடா பெரியசாமி, மாநில இணைப் பொருளாளர் சிவ சுப்பிரமணியம், மாவட்டத் தலைவர் செல்வராஜ் உள்ளிட்ட நிர்வாகிகள் இருந்தனர்.

## ஜம்மு காஷ்மீரில் 5 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை



ஸ்ரீநகர் : நவ. 18-

ஜம்மு காஷ்மீரில் லஷ்கர் இ தொய்பா பயங்கரவாதிகள் 5 பேர் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளனர்.

இது தொடர்பாக ஜம்மு காஷ்மீர் காவல்துறை வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், குல்காம் மாவட்டத்தில் பயங்கரவாதிகளுக்கு எதிராக நேற்று முன்தினம் வியாழக்கிழமை முதல் நடைபெற்று வரும் துப்பாக்கிச் சண்டையில் 5 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

ராணுவம், துணை ராணுவப்படை, காவல்துறை இணைந்து இந்தத் தாக்குதலை மேற்கொண்டது. பயங்கரவாதிகள் பதுங்கி இருந்த இடத்தில் இருந்து வெடிப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. சண்டை இறுதிக்கட்டத்தில் உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குல்காம் மாவட்டம், டிஹெச் போரா பகுதியின் சாம்னோ என்ற இடத்தில் பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாக கிடைத்த தகவலை அடுத்து இந்திய ராணுவத்தின் 34 ராஷ்ட்ரீய ரைபில் படை, 9 பாரா எனும் சிறப்பு அதிரடிப் படை, துணை ராணுவப் படை, காவல்துறை அடங்கிய கூட்டு பாதுகாப்புப் படையினர் அங்கு விரைந்தனர். இரு தரப்புக்கும் இடையே 2 நாட்களாக துப்பாக்கிச் சண்டை நடைபெற்று வந்த நிலையில், 5 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். பயங்கரவாதிகளுக்கு எதிரான இந்த நடவடிக்கைக்கு ஆபரேஷன் காளி எனப் பெயரிடப்பட்டது.

இதே பகுதியில் ஏற்கனவே பயங்கரவாதிகள் பதுங்கி இருந்த நிலையில், சமீப நாட்களில் இரண்டாவது முறையாக அங்கு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சுட்டுக்கொல்லப் பட்டவர்களில் பஷிர் அகமது மாலிக் என்ற பயங்கரவாதி அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர், லஷ்கர் இ தொய்பா பயங்கரவாத அமைப்பின் முக்கிய நபராக இந்தியாவுக்கு எதிராக செயல்பட்டவர் என பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.



செங்கல்பட்டு மாவட்டம் இலத்தூர் ஒன்றியம் கொடூர் ஊராட்சிக்கு உட்பட்ட கரிக்காமலை கிராமத்தில் பழுதடைந்த நிலையில் நியாய விலை கடை ஏங்கி வந்தது மக்களின் கோரிக்கையை ஏற்று புதிய நியாய கடை கட்டும் பணி நடைபெற்றது கட்டுமான பணிகள் முடிவடைந்த நிலையில் நேற்று புதிய நியாய விலை கடை திறப்பு விழா நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் கொடூர் ஊராட்சி மன்ற தலைவர் மா. புண்ணியகோட்டி தலைமை தாங்கி நியாய விலை கடையை திறந்து வைத்தார் இந்த நிகழ்ச்சியில் துணைத் தலைவர் தனலட்சுமி ரவீந்திரன் மற்றும் வார்டு உறுப்பினர்கள் மனோகரி ஸ்ரீராமுலு. ரேவதி வெங்கடேசன். அஞ்சாலை கிருஷ்ணா நந்தன். குணா தனபால். சத்யா நந்தகோபால். ரேவதி தனபால். ஹரிதாஸ் ஊராட்சி செயலாளர் அறிவுநிதி மற்றும் ஊர் பொதுமக்கள் தூய்மை காவலர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# காட்டுமன்னார்கோவில் பகுதியில் மாவட்ட ஆட்சியர் அரசு திட்டப் பணிகள் ஆய்வு



காட்டுமன்னார் கோவில் நவ 18

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார் கோவில் பகுதியில் ஊராட்சி ஒன்றியம் வாயிலாக நடைபெறும் பல்வேறு பணிகளை மாவட்ட ஆட்சியர் ஆய்வு செய்தார். கடலூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர் அருண் தம்புராஜ் நேற்று காலை காட்டுமன்னார்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஒன்றிய நிதியில் தற்போது நடைபெறும் சாலைகள், பல்வேறு கட்டிடங்களின் கட்டுமான பணிகள் பற்றிய விவரங்களை அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் புதியதாக சுமார் 3 கோடியே 95 லட்சம் மதிப்பில் கட்டப்படும் அலுவலக கட்டுமான பணிகளையும் பார்வையிட்டார். ருத்திரசோலை கிராமத்தில் நடைபெறும் இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு முகம் புதிய குடியிருப்பு கட்டுமான பகுதிகளை பார்வையிட்டு விவரங்களை கேட்டறிந்தார். பல்வேறு கிராமங்களில் நடைபெறும் பல்வேறு பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆய்வின்போது ஒன்றிய குழு தலைவர் சஅதியா பர்வீன் நிஜார் அகமது, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுகுமார், ராஜசேகர், உதவி மக்கள் தொடர்பு அதிகாரி பாலமுருகன், பொறியாளர் சந்தானகிருஷ்ணன், மேலாளர்கள் பார்த்திபன், பானுமதி, மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர்.



நொச்சிலி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கொரிஜால ஜி.கிருஷ்ணமநாயுடு, நொச்சிலி ஊராட்சி மன்ற தலைவர் ஜி.சிட்டியம்மா இல்ல திருமண வரவேற்பு அதிமுக-வின் மாவட்ட பிரதிநிதி மற்றும் நொச்சிலி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கொரிஜால ஜி.கிருஷ்ணமநாயுடு, நொச்சிலி ஊராட்சி மன்ற தலைவர் ஜி.சிட்டியம்மா இல்ல திருமண வரவேற்பு நிகழ்ச்சி சென்னை, பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள ஸ்ரீ கஜலட்சுமி கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது. இதில், முன்னாள் அமைச்சர்கள் பா.பெஞ்சமின், பி.வி. ரமணா, கழக அமைப்புச் செயலாளர் திருத்தணி கோ.அரி மற்றும் பள்ளிப்பட்டு ஒன்றிய கழகச் செயலாளர் டி.டி.சீனிவாசன், மாவட்ட கவுன்சிலர் எஸ்.சாந்தி பிரியா சுரேஷ், பொதட்டூர்பேட்டை பேரூர் செயலாளர் ஏ.ஜி. இரவிச்சந்திரன், அட்வகேட் அந்தமான் முருகன் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

# 10 வருடங்களுக்குப் பிறகு வடரங்கம் ரங்கநாத பெருமாளுக்கு திருக்கல்யாண விழா வரும் 19ஆம் தேதி நடைபெறுகிறது

மயிலாடுதுறை, நவ. 18-

மயிலாடுதுறை மாவட்டம், கொள்ளிடம் அருகே கொள்ளிடம் ஆற்றின் கரையோரம் ரங்கநாயகி தாயார் சமேத ரெங்கநாத பெருமாள் கோயில் உள்ளது. ஆயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த இக்கோயில் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது.

இங்கு வரும் 19 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை திருவோண நட்சத்திரம் கூடிய சுபயோக சுபதினத்தில் ரங்கநாதர் மற்றும் ரங்கநாயகிக்கு திருக்கல்யாண விழா மாலை 5 மணிக்கு துவங்கி நடைபெற உள்ளது.

இந்த திருக்கல்யாண விழா கடந்த 10 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தற்போது நடைபெறவிருக்கிறது. விழாவையொட்டி காலை 10 மணிக்கு மூலவர் அபிஷேகம், தீபாராதனை பகவத் பிராத்தனை, எஜமான் கிராம சங்கல்பம், தொடர்ந்து மாலை விக்னேஷ்வர பூஜை, புன்யாஹவாசகம் உற்சவர் அபிஷேகம், தீபாராதனையும் நடைபெற்று, சீர்வரிசைகளுடன் ரெங்கநாதபெருமாள் மாப்பிள்ளை அழைப்பு ஊர்வலம் ஊஞ்சல் பாட்டு, புன்யாகவாசகம் திருமாங்கல்ய தாரணமும், தீபாராதனையும் சாமி உள்பிரகாரம் புறப்பாடும் நடைபெறுகிறது.

விழாவிற்கான ஏற்பாடுகளை இந்து சமய அறநிலையத்துறை ஆலய தக்கார் முருகன், ஆய்வாளர் வீரவேல் பிரனேஷ், செயல் அலுவலர் உமேஷ்குமார், ஆலய அர்ச்சகர் ரமேஷ் மற்றும் உபயதாரர்கள், கிராமவாசிகள் திருக்கோயில் பணியாளர்கள் செய்து வருகின்றனர்.

10 வருடங்களுக்கு பிறகு வடரங்கம் ரங்கநாத பெருமாள்கோயிலில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் திருக்கல்யாண விழா நடைபெற இருப்பதால் கிராம மக்கள் மற்றும் பக்தர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# விவசாயிகள் மீது குண்டர் சட்டம் இந்திய ஊழல் எதிர்ப்பு இயக்கம். மாநிலத் தலைவர் கண்டனம்



திருவண்ணாமலை, நவ. 18-

திருவண்ணாமலையில் போராட்டம் நடத்திய விவசாயிகள் மீது போலீசார் குண்டர் சட்டம் பாய்ந்ததை விவசாயிகள் மீது குண்டர் சட்டம் இந்திய ஊழல் எதிர்ப்பு இயக்கம். மாநிலத்தலைவர் டாக்டர் ஆனந்தகுமார் கண்டனம் தெரிவித்தது அறிக்கை வெளியிட்டுள்ளார் அதில் அவர் தெரிவித்து இருப்பதாவது

போராடும் விவசாயிகளை குண்டர்கள் என்று மிரட்டி தனியார் பெருநிறுவன தொழிலதிபர்களுக்கு ஆதரவாக தமிழக திமுக அரசு செயல்படுவது ஒரு ஊழல். உரிய ஆதாரங்களுடன் வழக்கை உயர் நீதி மன்றத்தில் உடைப்பதோடு, சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளை சட்டத்தின் முன் நிறுத்தி அவர்களுக்கு தண்டனை பெற்று தந்து, விவசாயிகள் தக்க ஈழப்பீடும் பெற வேண்டும். விவசாய சங்கங்கள், சமூக ஆர்வலர்கள், ஆதரவு இயக்கங்கள் ஒருங்கிணைந்து தொடர் பரப்புரை செய்ய வேண்டும். விவசாயத்தை நலிவடையச் செய்யும் எந்த அரசாக இருந்தாலும் உணவு உண்ணும் மக்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு பெரும் போராட்டம் முன்னெடுக்க வேண்டும்.

இல்லையென்றால் நமக்கும், அதைவிட நம் எதிர்கால சந்ததிக்கும் உணவின் விலைவாசி எட்டா கனியாக உயர்ந்து நிற்கும். வயல்கள் தேவை. இனி விவசாய நிலங்களை அதிகரிக்க இயலாது. வேளாண் மண் குறையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அது நமது பிரச்சனை இல்லை என்று கருதி அலட்சியம் காட்டுவது நமது எதிர்கால சந்ததிக்கு நாம் செய்யும் துரோகம்.

அதனால், தமிழக திமுக அரசு உடனே விவசாயிகள் மீதான குண்டர் குற்றச்சாட்டை ரத்து செய்து, ஒட்டு மொத்த தமிழகத்தை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்து வரலாறு படைக்கவேண்டும். நெல் விவசாயத்தை உலகுக்கு கற்றுக்கொடுத்தது தமிழன் மற்றும் இந்த தமிழ் மண் என்பதை கருத்தில் கொண்டு முதலமைச்சர் ஸ்டாலின் அது போல நல்ல முடிவெடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

## மழை வெள்ள பாதிப்புகளை எதிர்கொள்ள

# கொள்ளிடம் நீர்வளத்துறை அலுவலக வளாகத்தில் 3 ஆயிரம் மணல் மூட்டைகள் மற்றும் சவுக்கு கட்டைகள் தயார்



கொள்ளிடம் நவ 18.

வங்க கடலில் மிதிலி புயல் உருவானதையடுத்து கொள்ளிடம் நீர்வளத்துறை அலுவலக வளாகத்தில் 3000 மணல் மூட்டைகள் மற்றும் சவுக்கு, யூகலிப்டஸ் மரங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம் பகுதியில் கடந்த சில தினங்களாக அதிக மழை பொழிவு இருந்து வந்தது. இதனால் நெற்பயிரில் தண்ணீர் தேங்கியது. ஆனால் நேற்று முன் தினம் மற்றும் நேற்று மழை இன்றி இருந்து வருவதால் நெற்பயிரில் தேங்கிய மழைநீர் படிப்படியாக வெளியேற துவங்கி உள்ளது.

இந்நிலையில் வங்க கடலில் மிதிலி என்ற புயல் உருவானதை அடுத்து மழை அதிகம் இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்பட்டு வருகிறது. இதனால் கொள்ளிடம் நீர்வளத்துறை அலுவலகத்தில் நேற்று 3 ஆயிரம் மணல் மூட்டைகள் மற்றும் சவுக்கு யூகலிப்டஸ் மரங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

பாசன வாய்க்கால் கரைகள் மெலிந்த இடங்களிலும் ஆற்றின் கரை பகுதியை ஒட்டியும் மணல் மூட்டைகளை போட்டு சரி செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் மணல் மூட்டைகள் விவசாயிகளுக்கு தேவைப்பட்டால் அப்பகுதியில் உள்ள பாசன கிளை வாய்க்கால்களை அடைத்து சரிசெய்துகொள்ள மணல் மூட்டைகள் வழங்கப்படும் என்றும் தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மணல் மூட்டைகள் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# சீர்காழி அருகே உயர் அழுத்த மின் கோபுரத்தில் வேலை செய்த வடமாநில தொழிலாளர் மின்சார கம்பில் விழுந்து உயிரிழப்பு



சீர்காழி, நவ. 18-

சீர்காழி அருகே உயர் அழுத்த மின் கோபுரத்தில் வேலை செய்த வடமாநில தொழிலாளர் மின்சார கம்பில் விழுந்து உயிரிழப்பு. உடலை மீட்டு சீர்காழி போலிசார் விசாரணை.

நெய்வேலியிலிருந்து உயர் அழுத்த மின் கோபுரங்கள் அமைத்து காரைக்காலுக்கு 220 கிலோ வாட் உயரழுத்த மின்சாரம் செல்கிறது. மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியை அடுத்த வள்ளுவக்குடி பகுதியின் அமைந்துள்ள மின் கோபுரத்தில் சென்னையை சேர்ந்த ஸ்ரீ கிருஷ்ணா பவர் கம்பெனியின் ஊழியர்கள் வேலை செய்து வந்தனர்.

ஜார்கண்ட் மாநிலத்தை சேர்ந்த சந்தோஸ் குமார் மாக்டூ என்பவர் பிட்டராக வேலை செய்து வருகிறார். மின் கோபுரத்தில் பழுது பார்த்துக் கொண்டிருக்கும் போது எதிர்பாராத விதமாக தவறி மின் கம்பியில் விழுந்துள்ளார். சக ஊழியர்கள் கயறு கட்டி கீழே இறக்கி சீர்காழி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

அவரை பரிசோதித்த மருத்துவர்கள் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர். இதனை அடுத்து உடற்கூறு ஆய்வுக்காக பிணவறையில் வைக்கப்பட்டுள்ளது. மேலும் சீர்காழி போலிசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

## கொள்ளிடம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில்

# பள்ளி செல்லா குழந்தைகளுக்கான இரண்டடுக்கு அமைப்பு கொண்ட குழு கூட்டம்



கொள்ளிடம் நவ 18.

மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், பள்ளி செல்லா மற்றும் இடைநின்ற மாணவர்களுக்கான இரண்டடுக்கு வட்டார அளவிலான குழு கூட்டம் நேற்று நடைபெற்றது.

ஊரக வளர்ச்சித்துறை உதவி இயக்குனர் மஞ்சுளா தலைமை வகித்தார். வட்டார வளமைய மேற்பார்வையாளர் ஞானபுகழேந்தி வரவேற்றார். வட்டார கல்வி அலுவலர்கள் சரஸ்வதி, கோமதி, வட்டார வளர்ச்சி அலுவலர் அருள்மொழி, கொள்ளிடம் சப் இன்ஸ்பெக்டர் அகோர மூர்த்தி, மக்கள் புறத்தொடர்பு அலுவலர் மங்களதாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட ஊரக வளர்ச்சித் துறை உதவி இயக்குனர் மஞ்சுளா கூட்டத்தில் பேசுகையில், கொள்ளிடம் ஒன்றியத்தில் 95 சதவீத இடைநின்ற மாணவர்கள் மீண்டும் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மீதமுள்ள ஐந்து சதவீத மாணவர்களையும் பள்ளியில் சேர்ப்பதற்கு அதற்கான முயற்சிகளை அனைவரும் செய்ய வேண்டும் என்றார். அதனைத் தொடர்ந்து வட்டார வள மையம் மேற்பார்வையாளர் ஞானபுகழேந்தி கூறுகையில், பள்ளி செல்லா மற்றும் இடைநின்ற மாணவர்களை பள்ளியில் சேர்ப்பதற்கு ஊராட்சி மன்ற பிரதிநிதிகள் பள்ளியின் தலைமை ஆசிரியர்கள் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

ஒரு மாணவனுக்கு கல்வி கொடுப்பது அந்த மாணவனுக்கு முழுமையான வாழ்க்கையை அளிப்பதற்கு சமமாகும். ஒரு சமூகம் கல்வியால் மட்டுமே மாற்றத்தை பெற முடியும். எனவே இதுபோன்ற இடைநின்ற மாணவர்கள் இருந்தால் மாணவர்களை மீண்டும் பள்ளியில் சேர்ப்பதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு தர வேண்டும். அதோடு மட்டுமல்லாமல் பள்ளி செல்லா மற்றும் இடைநின்ற மாணவர்கள் இருந்தால் அவர்களை மீண்டும் பள்ளியில் சேர்ப்பதற்கு கீழ்க்கண்ட தொடர்பு எண்ணுக்கு 9788858785 தெரிவிக்கலாம் என்றார்.

கூட்டத்தில் வட்டார அளவிலான சிறப்பு ஆசிரியர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். முடிவில் ஆசிரியர் பயிற்றுநர் ஐசக் ஞானராஜ் நன்றி கூறினார்.

# ஆரணியில் லட்சுமி அம்மன் திருக்கோவிலில் நாக சதுர்த்தி விழாவை முன்னிட்டு ஏராளமான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர்





ஊத்துக்கோட்டை, நவ18-

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணி சமுதாயக்கூடம் அருகே லட்சுமி அம்மன் திருக்கோவில் உள்ளது.

இக்கோவிலில் உள்ள புற்றுக்கு பக்தர்கள் நாக சதுர்த்தி விழாவை முன்னிட்டு மஞ்சள், குங்குமம் வைத்து பால் ஊற்றி சுவாமி தரிசனம் செய்தனர். இதேபோல் ஆரணி பிஞ்சலார் தெருவில் உள்ள ஸ்ரீ நாகாத்தம்மன் திருக்கோவிலில் நாக சதுர்த்தியை முன்னிட்டு நேற்று காலை அபிஷேகம் நடைபெற்றது.

மதியம் கோவில் வளாகத்தில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. பின்னர், மூலவருக்கு சந்தன காப்பு அலங்காரம் செய்யப்பட்டது. இதைத்தொடர்ந்து மங்கள வாத்தியம் முழங்க சுவாமி திருவீதி உலாவரும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பக்தர்களும், விழா குழுவினர்களும் சிறப்பாக செய்திருந்தனர்.



நாமக்கல் மாவட்டம் ஆனங்கூர் சாலையில் புதியதாக கட்டப்பட்டுள்ள ஆவின் விற்பனை அலுவலகத்தை வனத்துறை அமைச்சர் மதிவேந்தன் திறந்து வைத்தார். உடன், கலெக்டர் உமா, நாடாளுமன்ற உறுப்பினர் சின்ராஜ், திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர். ஈஸ்வரன், நகரமைப்பு மண்டல திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எம்.மதுரா செந்தில் உட்பட பலர் உள்ளனர்.

# மயிலாடுதுறை மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை அமைச்சர் மெய்யநாதன் ஆய்வு

## மயிலாடுதுறை மாவட்டம் முழுவதும் 3 ஆயிரம் ஹெட்டர் விளைநிலங்கள் பாதிப்பு



சீர்காழி, நவ. 18-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே கொள்ளிடம் பகுதியில் கனமழையால் சம்பா நேரடி விதைப்பு விளைநிலங்களில் மழைநீர் தேங்கி பாதிப்புக்குள்ளான வயல்களை சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மெய்யநாதன் ஆய்வு செய்தார்.

உப்பனாற்றை தூர்வாரவும், காப்பீடு தேதியை 30 ம் தேதி வரை நீட்டிகவும், இடுபொருட்களை இலவசமாக வழங்கவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். வடகிழக்கு பருவமழை கடந்த 13 ம் தேதி தொடங்கி தொடர் மழை பெய்து வரும் நிலையில் மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே கொள்ளிடம் சுற்றுவட்டார பகுதியான நல்லூர், ஆரப்பள்ளம், பழையபாளையம் உள்ளுட்ட பகுதிகளில் சுமார் பத்தாயிரம் ஏக்கரில் நேரடி விதைப்பு செய்யப்பட்டிருந்த 30 நாட்கள் ஆன சம்பா நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கியுள்ளது.

நல்லூர் மட்டுமின்றி ஆரப்பள்ளம், காட்டூர், கோதண்டபுரம் அளக்குடி, முதலைமேடு உள்ளிட்ட 10 கிராமத்திலும் விளைநிலங்களை தண்ணீர் சூழ்ந்து வெள்ளக்காடாகா காட்சி அளிக்கிறது. மேலும் பயிர்கள் முற்றிலும் மூன்று நாட்களாக தண்ணீரில் மூழ்கி கிடப்பதால் அழுகும் நிலை இருப்பதாகவும் தமிழக அரசு உரிய கணக்கெடுப்பு செய்து நிவாரணம் வழங்க கோரிக்கை விடுத்தனர்.

அதன் பேரில் தமிழக சுற்றுசூழல் துறை அமைச்சர் மெய்யநாதன் சீர்காழி அருகே நல்லூர் கிராமத்தில் மழைநீர் தேங்கி நிற்கும் வயல்களை பார்வையிட்டு வயல்களில் மூழ்கி உள்ள பயிர்களை விவசாயிகள் பறித்து வந்து காண்பித்தனர். பின்னர் அவர்களின் குறைகளை கேட்டறிந்தார். மேலும் பாதித்த பயிர்களுக்கு உரிய கணக்கெடுப்பு செய்து நிவாரணம் வழங்க வேண்டும், நல்லூர் உப்பனாற்றை தூர்வாரி மதகுகள் வைக்கவும், இலவசமாக இடுபொருள்கள் வழங்கவும் கோரிக்கை வைத்தனர்.

விவசாயிகளின் கோரிக்கையை விரைந்து செய்து தர அதிகாரிளுக்கு அமைச்சர் உத்தரவு விட்டார். மயிலாடுதுறை மாவட்டத்தில் சீர்காழி 1,088 ஹெக்டேரும், கொள்ளிடத்தில் 1,200 ஹெக்டேரும், செம்பனார்கோவிலில் 600 ஹெக்டேரும் பாதிப்புஎன அமைச்சர் தெரிவித்தார்.

ஆய்வின் போது மயிலாடுதுறை ஆட்சியர் மகாபாரதி, மயிலாடுதுறை எம்.பி இராமலிங்கம், சீர்காழி எம்.எல்.ஏ பன்னீர்செல்வம் மற்றும் வருவாய்துறை, பொதுப்பணித்துறை, வேளாண் துறை, ஊராட்சி ஒன்றிய துறை ஆகிய அதிகாரிகள் உடன் இருந்தனர்.

# தருமபுரி மாவட்டம் கடத்தூர் ஆர்.கோபிநாதம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் இலக்கிய மன்ற துவக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது



தருமபுரி :நவ-18

தருமபுரி மாவட்டம் ஆர்.கோபிநாதம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியின் வளாகத்தில் நடைபெற்ற இவ் நிகழ்விற்கு பள்ளியின் தலைமையாசிரியர் இரா.செல்வம் தலைமை வகித்தார்.

பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் ஜானகிராமன், கோபிநாதம்பட்டி ஊராட்சி மன்ற துணைத் தலைவர் சம்பத், எஸ்.எம்.சி தலைவர் சங்கீதா முன்னிலை வகித்தனர். பள்ளி ஆசிரியர் கைலாசம் வரவேற்று பேசினார். குறள் நெறிப் பேரவை செயலாளர் வெங்கடேசன் அறிக்கை வாசித்தார்.

மேனாள் குறள் நெறிப் பேரவை செயலாளர் பரமசிவம் நிகழ்வை ஒருங்கிணைப்பு செய்தார். தமிழக அரசின் தூய தமிழ் பற்றாளர் விருது பெற்ற பாவலர் மலர்வண்ணன் பாராட்டு விழா எடுக்கப்பட்டது. நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக தமிழ் மகன் ப.இளங்கோ கல்வி இயல் என்ற பொருண்மையில் பேசினார். ஜெயம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் நா.நாகராஜ் அன்புடைமை என்ற பொருண்மையில் பேசினார்.

குறள் நெறிப் பேரவை பொருளாளர் இர.இலட்சுமி காந்தன், சமூக சேவகர் அர்த்தநாரி உடற்கல்வி ஆசிரியர் மு.சிவக்குமார் நன்றி கூறினர். நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் என பலர் கலந்துகொண்டனர்.

# தென்காசி கருப்பாநதி நீர்த்தேக்கத்திலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர்தண்ணீர் திறந்து வைத்தார்



தென்காசி,நவ.18–

தென்காசி மாவட்டம் கருப்பாநதி நீர்த்தேக்கத்திலிருந்து விசையான பருவ சாகுபடிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் துரை ரவிச்சந்திரன் மற்றும் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம். குமார் ஆகியோர் தண்ணீர் திறந்து வைத்தனர்.

தென்காசி மாவட்டம்– சொக்கம்பட்டி அருகே மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்துள்ள கருப்பாநதி அணையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆணையின்படி தென்காசி மாவட்டம் கடையநல்லூர் வட்டம் கருப்பாநதி அணையிலிருந்து பருவ சாகுபடிக்கு மாவட்ட ஆட்சியர், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ்எம். குமார் தண்ணீர் திறந்து வைத்தனர். கருணாநிதி பாசன திட்டத்தின் கீழ் பெருங்கால், பாப்பாங்கால், சீவலன்கால், இடைகால், கிளாங்காடு, ஊர் மேலழகியான், ஆகிய கால்வாய்களின் கீழ் உள்ள 9514.70 ஏக்கர் நேரடி பாசனம் மற்றும் மறைமுக பாசனமான நிலங்களுக்கு நடப்பாண்டுபிசான பருவ சாகுபடிக்கு கருப்பாநதி நீர் தேக்கத்தில் இருந்து 17.11.2023 முதல் 31. 3. 2024 வரை 138 நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு வினாடிக்கு 25 கன அடி வீதம் மொத்தம் 1189.34 கன அடிக்கு மிருகாமல் நீர் இருப்பை பொறுத்து தண்ணீர் திறந்து விடப்படும்.

இதன் மூலம் வைரவன் குளம், கிருஷ்ணாபுரம், சொக்கம்பட்டி, குமந்தாபுரம், போக நல்லூர், கடையநல்லூர், இடைகால், கிளாங்காடு, கம்பநேரி கிராமம், பொய்கை, திருமலாபுரம், சேர்ந்தமரம், குலசேகரமங்கலம், வீரசிகாமணி உள்ளிட்ட 14 கிராமங்கள் பயன் பெறும். எதிர்வரும் நாட்களில் வடகிழக்கு பருவமழையினால் மேலும் அணையில் நீர்வரத்து அதிகரிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது மேலும் நீர்த்தேக்கத்தில் எதிர்வரும் நாட்களில் பருவ மழை பொய்த்து எதிர்பார்க்கின்ற நீர்வரத்து கிடைக்கப் பெறவில்லை என்றால் இருக்கும் நீரை அனுமதிக்கப்பட்ட பாசன நிலங்கள் முழுமைக்கும் பயன்பெறும் வகையில் சுழற்சி முறையில் வழங்கப்படும் எனவும் நீரை சிக்கனமாக பயன்படுத்தவும் நீர் விநியோகப் பணியில் நீர்வள துறைக்கு ஒத்துழைப்பு தருமாறும் மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார். இந்நிகழ்ச்சியில் நீர் வளம் ஆதாரத்துறை, செயற்பொறியாளர்கள் அண்ணாதுரை, உதவி செயற் பொறியாளர் ராஜேந்திரன், உதவி பொறியாளர் சரவணகுமார், உதவி மக்கள்தொடர்பு அலுவலர் ராமசுப்பிரமணியன், அரசு அலுவலர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தேசிய அளவிலான ஸ்கை மாசிலாஸ் விளையாட்டில்

# தத்தனூர் எம்ஆர் பொறியியல் கல்லூரி மாணவி தேசிய அளவில் 3வது இடம் பிடித்து சாதனை



அரியலூர்,நவ.18–

தேசிய அளவிலான ஸ்கை மாசிலாஸ் விளையாட்டுப் போட்டியில் தத்தனூர் எம் ஆர் பொறியியல் கல்லூரி மாணவி தேசிய அளவில் மூன்றாவது இடம் பிடித்துள்ளார், இது பற்றி கல்லூரி நிர்வாகம் வெளியிட்ட செய்தி குறிப்பு:

கோவாவில் நடைபெற்ற, 37 ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகளில், ஸ்கை மாசிலாஸ் விளையாட்டில், அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், தத்தனூர் மீனாட்சி இராமசாமி பொறியியல் கல்லூரி மாணவி ஷோபனா, 54 கிலோ பிரிவுகளில் வெண்கலப் பதக்கம் வென்று சாதனை படைத்தார்.

வெற்றிபெற்ற மாணவிக்கு, மீனாட்சி இராமசாமி கல்வி நிறுவனங்களின் தாளாளர் எம். ஆர்.இரகுநாதன் ரூபாய் 10,000 பரிசு வழங்குவதாக அறிவித்து பாராட்டினார், இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# "அண்ணா பல்கலை : தேர்வுக் கட்டண உயர்வு வரும் செமஸ்டருக்குப் பொருந்தாது" – அமைச்சர் பொன்முடி விளக்கம்



விழுப்புரம் : நவ. 18–

" அண்ணா பல்கலைக்கழகத்தில் ஒரு பாடத்துக்கு ரூ.150-ஆக இருந்த தேர்வுக் கட்டணம் ரூ.225-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இருப்பினும் வரும் செமஸ்டருக்கு இந்தத் தேர்வுக் கட்டண உயர்வு நடைமுறைப்படுத்தப்படாது" என்று தமிழக உயர்கல்வித் துறை அமைச்சர் பொன்முடி கூறியுள்ளார்.

விழுப்புரத்தில் தமிழக உயர் கல்வித்துறை அமைச்சர் பொன்முடி நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியது: "அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் தகுதிநீக்கம் செய்யப்பட்ட 56 உதவிப் பேராசிரியர்களில், 52 பேர் வணிக மேலாண்மைப் பிரிவில் பட்டம் பெற்று பணியாற்றியுள்ளனர். முனைவர் பட்டம், எம்ஃப்பில், என எந்த தகுதியும் இல்லாமல் அவர்கள் பணி செய்து வந்துள்ளனர். செலட், நெட் தேர்வுகளில் 55 சதவீத மதிப்பெண்கள் வாங்கியிருக்க வேண்டும். இதுபோன்ற எந்த தகுதியுமே இல்லாமல், பணியாற்றி வந்துள்ளனர். இன்னும் சொல்லப்போனால், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகங்களில் தேர்வெழுதி வந்தவர்களைக்கூட, உதவிப் பேராசிரியர்களாக நியமிக்கும் நிலைதான் இருந்திருக்கிறது.

எனவே, தகுதி குறைவானவர்களை பணிநீக்கம் செய்ய வேண்டும் என ஆரம்பத்தில் இருந்தே சுட்டிக்காட்டப்பட்டு, 2019-ல் சிண்டிகேட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, தற்போது துணைவேந்தர் அதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கிறார். இந்த முடிவு வரவேற்கத்தக்க ஒன்று. தகுதிநீக்கம் செய்யப்பட்ட உதவிப் பேராசிரியர்களுக்கு 10 ஆண்டுகளாக அவர்களது தகுதியை மீறிய சலுகைகள் வழங்கப்பட்டு வந்தது. இதற்கு யார் காரணமாக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் இருந்த கூடுதல் உதவிப் பேராசிரியர்கள் சிலரை, அரசுக் கல்லூரிகளில் இருந்த காலிப் பணியிடங்களுக்கு நாங்கள் மாற்றினோம். அரசு அவர்களுக்கு என்ன சலுகைகள் செய்ய வேண்டுமோ அதெல்லாம் செய்தும்கூட, இதுபோன்ற தவறுகள் சுட்டிக்காட்டப்பட்டது. உயர் கல்வித்துறை இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. வருங்காலத்தில், அவர்களது தகுதிகேற்ப பணிகளுக்கு அவர்கள் விண்ணப்பித்தால், அவர்களுக்கு பணி வழங்குவது குறித்து அரசு பரிசீலிக்கும்" என்றார்.

அண்ணா பல்கலைக்கழகத் தேர்வுக் கட்டணம் உயர்வு குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், "பொதுவாக பல்கலைக்கழகங்களில் அனைத்துப் பாடங்களுக்கும் தேர்வுக் கட்டணம் என்பது ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என ஏற்கெனவே முடிவு எடுத்தோம். எனவே, ஒரே மாதிரியாக தேர்வுக் கட்டணம் வசூலிக்க வேண்டும் என்று துணைவேந்தர்கள் கூட்டத்தில் அறிவித்திருந்தோம்.

அதன் அடிப்படையில், அண்ணா பல்கலைக்கழகத்தில் ஒரு பாடத்துக்கு ரூ.150-ஆக இருந்த தேர்வுக் கட்டணத்தை, ரூ.225-ஆக உயர்த்தியுள்ளனர். மற்ற பல்கலைக்கழகங்களில் தேர்வுக் கட்டணம் அதிகமாக இருப்பதாகவும், அண்ணா பல்கலைக்கழகத்தில் குறைவாக இருப்பதால் அதனை உயர்த்துவதாக பல்கலைக்கழக நிர்வாகத்தினர் கூறியிருந்தனர். ஆனால், இந்த செமஸ்டருக்கு தேர்வுக் கட்டணம் உயர்த்தப்படாது. வருங்காலத்தில், அனைத்து துணைவேந்தர்கள் மற்றும் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்களை அழைத்துப் பேசி அடுத்த ஆண்டில் இருந்து ஒரே மாதிரியான தேர்வுக் கட்டணம் வசூலிப்பது தொடர்பாக கலந்துரையாடி முடிவெடுக்கப்படும். எனவே, இந்த செமஸ்டருக்கு கட்டண உயர்வு நடைமுறைப்படுத்தப்படாது" என்று தமிழக உயர்கல்வித் துறை அமைச்சர் பொன்முடி கூறினார்.

முன்னதாக, அண்ணா பல்கலைக்கழகத் தேர்வுக் கட்டணம் மற்றும் சான்றிதழ் கட்டணத்தை 50 சதவீதமாக உயர்த்த பல்கலைக்கழக சிண்டிகேட் குழுக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இதனால், இளநிலைப் பாடப்பிரிவுகளுக்கான எழுத்து மற்றும் செய்முறைத் தேர்வு என ஒவ்வொரு தாளுக்கும் ரூ.150-ஆக இருந்த தேர்வுக் கட்டணம் ரூ.225-ஆக உயர்த்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# தென்காசியில் தமிழ்நாடு கிராம வங்கியின் 657 வது கிளையினை மாவட்ட ஆட்சியர் திறந்து வைத்தார்



தென்காசி,நவ.18–

தென்காசி மாவட்டம் தென்காசியில் தமிழ்நாடு கிராம வங்கியின் 657 வது கிளையினை மாவட்ட ஆட்சித் தலைவர் துரை. ரவிச்சந்திரன் புதிய கட்டிடத்தினை திறந்து வைத்தார், இவ்விழாவில் 116 பயனாளிகளுக்கு சுய உதவி குழு கடன், தொழில் கடன், பிரதான் மந்திரி சாலையோர வியாபாரிகள் கடன், வீட்டுக் கடன் ஆகியவை ரூபாய் ஒரு கோடியே 13 லட்சத்திற்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு வங்கியின் பொது மேலாளர் வாசுதேவன் தலைமை உரை ஆற்றினார், முடிவில் கிளை மேலாளர் அஜித் செல்வன் நன்றி கூறினார், திறப்பு விழா நிகழ்ச்சியில் தென்காசி மாவட்ட தொழில் மையம் பொது மேலாளர் மாரியம்மாள், அரசு மற்றும் வங்கி அதிகாரிகள் செய்தி உதவி மக்கள் தொடர்பு அலுவலர் ராமசுப்பிரமணியன் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## 'மதுரை வீரன் உண்மை வரலாறு'

# புத்தக தடைக்கு எதிரான வழக்கில் மனுதாரர் விளக்கம் அளிக்க ஐகோர்ட் உத்தரவு



சென்னை : நவ. 18–

'மதுரை வீரன் உண்மை வரலாறு' என்ற புத்தகத்துக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை எதிர்த்து தொடரப்பட்டுள்ள 'ரிட்' வழக்கு விசாரணைக்கு உகந்ததா என விளக்கமளிக்க, புத்தகத்தின் ஆசிரியர் குழந்தை ராயப்பன் தரப்புக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

'மதுரை வீரன் உண்மை வரலாறு' என்ற புத்தகத்தை குழந்தை ராயப்பன் என்பவர் எழுதியிருக்கிறார். இந்த நூலை ஆதித் தமிழர் பேரவை என்ற அமைப்பு வெளியிட்டிருக்கிறது. 'இந்தப் புத்தகத்தில் ஆட்சேபனைக்குரிய, திரித்து எழுதப்பட்ட தகவல்களைக் கொண்டதாக உள்ளது. பல சமூகத்தினரை விமர்சனம்செய்வதாகவும் சாதியவாதத்துக்கு காரணம் என்று குற்றம்சாட்டுவதாகவும் உள்ளது' என இந்தப் புத்தகங்களுக்கு கடந்த 2015-ம் ஆண்டு தமிழக அரசு தடை விதித்தது. இந்த தடையை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் புத்தகத்தை எழுதிய குழந்தை ராயப்பன் வழக்கு தொடர்ந்திருந்தார்.

அவர் தாக்கல் செய்த மனுவில், "நான் ஒரு சமூக ஆர்வலர், தாழ்த்தப்பட்ட மக்களுக்காக பல புத்தகங்களை எழுதியுள்ளேன். நான் எழுதிய 'மதுரை வீரன் உண்மை வரலாறு' என்ற புத்தகம் மதுரை வீரனின் வீரத்தை குறிப்பிட்டு எழுதப்பட்டது. சாதி ரீதியாக எதுவும் இல்லை. இந்தப் புத்தகம் அனைத்து தரப்பினரின் வரவேற்பை பெற்ற புத்தகம். தன்னிடம் உரிய விளக்கம் கேட்கப்படாமல் இந்தப் புத்தகத்துக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த தடையை நீக்க வேண்டும்" என்று கோரியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த தனி நீதிபதி, குற்ற விசாரணை முறைச் சட்டம் 96-வது பிரிவின்படி, புத்தகங்களை பறிமுதல் செய்ததை எதிர்த்த வழக்குகளை மூன்று அல்லது மூன்றுக்கும் மேற்பட்ட நீதிபதிகள்தான் விசாரிக்க வேண்டும் எனக் கூறி, வழக்கை விசாரிக்க மூன்று நீதிபதிகள் அமர்வு அமைக்க, வழக்கை தலைமை நீதிபதிக்கு பரிந்துரைத்து உத்தரவிட்டார். அதன்படி நீதிபதிகள் கிருஷ்ணகுமார், சி.வி.கார்த்திகேயன் மற்றும் தனபால் அடங்கிய முழு அமர்வு அமைக்கப்பட்டது.

இந்த வழக்கு முழு அமர்வு முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில், "கடந்த 2013-ல் புத்தகம் வெளியிடப்பட்டபோது, பொது ஒழுங்குக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. சட்டம் - ஒழுங்கு பிரச்சினையும் இல்லை. 2000 புத்தகங்கள் விற்கப்பட்ட நிலையில், தடை குறித்து புத்தக ஆசிரியருக்கு அரசு எந்த தகவலும் தெரிவிக்கவில்லை. பறிமுதல் தொடர்பாகவும் எந்த நோட்டீஸூம் அளிக்கவில்லை" என வாதிடப்பட்டது.

அப்போது தமிழக அரசு தரப்பில், "குற்ற விசாரணை முறைச் சட்டம் 95-வது பிரிவின் கீழ், புத்தகத்தை தடை செய்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து, குற்ற விசாரணை முறைச் சட்டம் 96-வது பிரிவின் கீழ் 2 மாதங்களுக்குள் உயர் நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கவேண்டும். அரசியல் சாசனத்தின் 226-வது பிரிவின் கீழ் ரிட் வழக்கு தாக்கல் செய்ய முடியாது" என தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள், ரிட் வழக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு விசாரணைக்கு உகந்ததா என்பது குறித்த தீர்ப்புகளுடன் விளக்கமளிக்க மனுதாரர் தரப்புக்கு உத்தரவிட்டு, விசாரணையை நவம்பர் 22-ம்தேதிக்குதள்ளிவைத்தனர்.



▶ தருமபுரி மாவட்டம், பாலக்கோடு ஊராட்சி ஒன்றியம், புலிகரை ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் நடத்தப்பட்ட தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சியினை பொது மக்கள் பார்வையிட்டார்கள்.

# அரியலூரில் பெரிய திருக்கோணம் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு அன்னதானம்



அரியலூர், நவ.18–

அரியலூர் மாவட்டம் பெரிய திருக்கோணம் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

நாகப்பட்டினம் ராமலிங்கம் செட்டியார் மகன் ரகுபதி என்பவர், மும்பையில் உள்ள ஒரு ஐடி நிறுவனத்தில் தகவல் தொழில் நுட்ப அலுவலராக பணியாற்றி வருகிறார், அவர்களது குலதெய்வம் கோயிலான, அரியலூர் மாவட்டம், பெரிய திருக்கோணம் கிராமத்தில் உள்ள உத்தாண்ட அய்யனார் கோயிலில் ராமலிங்கம் நினைவு நாளை முன்னிட்டு சிறப்பு வழிபாடு நடத்தப்பட்டது. மேலும் பெரிய திருக்கோணம் கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி வளாகத்தில் அங்கு கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு வடை பாயாசத்துடன் அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பள்ளியின் தலைமை ஆசிரியர் பாலசுப்பிரமணியன் உதவி ஆசிரியர் ரமேஷ் காந்தி இளையத்தான்குடி பன்னீர்செல்வம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# கறம்பக்குடி பகுதிகளில் கார்த்திகை தீப அகல் விளக்கு தயாரிக்கும் பணி தீவிரம்



கறம்பக்குடி , நவ. 18–

கார்த்திகை தீபத்திருநாள் வரும் 26ம் தேதி கொண்டாடப்பட உள்ளது. இதற்காக கறம்பக்குடி பகுதியில் அகல் விளக்குகள் தயாரிக்கும் பணி தீவிரமடைந்துள்ளது.

கார்த்திகை தீபத் திருநாளை முன்னிட்டு கோவில்கள், வீடுகள்,கடைகளில் தீபம் ஏற்றி வழிபாடு நடத்தி கொண்டாடிவருவது வழக்கம். இதற்காக புதுக்கோட்டை மாவட்டத்தில் மழையூர்,ராங்கியன்விடுதி,வாராப்பூர், துவரடிமனை, கொசலக்குடி, பொன்னமராவதி உள்ளிட்ட பகுதிகளில் அதிக அளவில் விளக்குகள் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதற்காக, அப்பகுதிகளில் உள்ள குளத்தில் இருந்து களிமண் எடுக்கப்பட்டு, சக்கரம் மூலம் விளக்குகள் எடுத்து அதை காயவைத்து பின்பு விறகுகள் மூலம் சூளை வைத்து அகல் விளக்குகள் தயாரிக்கப்படுகிறது. இங்கு தயாரிக்கும் அகல் விளக்குகள் புதுக்கோட்டை மாவட்டம் மட்டுமின்றி திருச்சி, தஞ்சாவூர், மதுரை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும் விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

இதுகுறித்து, மழையூரில் அகல் விளக்கு தயாரிப்பு பணியில் ஈடுபட்டுள்ள சக்திவேல் கூறியதாவது:

இங்குள்ள குளத்தில் இருந்து களிமண் இலவசமாக கிடைத்தாலும் அதை எடுத்து வருவதற்கான வாகன செலவு அதிக அளவில் ஏற்படுகிறது, நாள் ஒன்றுக்கு 700 முதல் ஆயிரம் விளக்குகள் தயாரிக்க முடியும், ஆயிரம் விளக்குகள் ரூ. 900-க்கு விற்பனை செய்கிறோம். உள்ளூர் மற்றும் வெளியூர்களுக்கும் சென்று விற்பனை செய்து வருகிறோம், முன்பு ஓராண்டு முழுவதும் வேலை இருந்தது. ஆனால், தற்போது 6 மாதங்கள் மட்டுமே வேலை உள்ளது. இத்தொழிலில் ஈடுபடுவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது.

இத்தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு இலவச மின்சாரம் வழங்க வேண்டும், மானியத்துடன் கூடிய வங்கி கடன் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், மண்பாண்டகளை பாதுகாப்பாக கொண்டுசெல்ல மானியத்துடன் வாகன கடன் வழங்கவேண்டும், மழையூரில் மண்பாண்ட தொழிலாளர்களுக்காக அமைக்கப்பட்ட தொழிற்கூடப் பணிகள் ஆண்டுகணக்கில்கிடப்பில் கிடைக்கிறது, அரசு விரைவில் நடவடிக்கை எடுத்து தொழிற்கூடம் பயன்பாட்டுக்கு கொண்டு வரவேண்டும் என கூறினார்.

# அறந்தாங்கி அருகே சமூக சேவகர் முத்தரசனின் 16–வது நினைவு நாளை முன்னிட்டு நாகுடி அரசுப்பள்ளியில் பரிசளிப்பு விழா



அறந்தாங்கி,நவ.18–

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே அரியமரக்காடு முத்தரசன் அம்பலம் 16-வது நினைவுநாளை முன்னிட்டு நாகுடி அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற கவிதை,கட்டுரை பேச்சுபோட்டி

விளையாட்டுபோட்டி உள்ளிட்ட பல்வேறு வகையான போட்டிகளில் சிறப்பாக விளையாடி முதல் மூன்று இடங்களை பிடித்து வெற்றிபெற்ற மாணவ-மாணவியர்களுக்கு பரிசுப்பொருட்கள் கல்வி உபகரணங்கள் மற்றும் இருபாலர் பள்ளிசீருடைகள் வழங்கி பாராட்டு விழாநடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் பள்ளித் தலைமை ஆசிரியர் முருகேசன் பெற்றோர் ஆசிரியர் கழக துணைத் தலைவர் குணசேகரன் சமூக ஆர்வலர்கள் சிங்கப்பூர் சந்திரன், விவேக், சபரிநாதன், சண்முகம், மின்வாரிய பொறியாளர் சிவகுமார் , தனியார் வங்கி மேலாளர் நாகுடி சித்தார்த், முதுகாடு கார்த்திகேயன், அரியமரக்காடு சரவணன், பாண்டியன் களக்குடி கண்ணன், இருபால் ஆசிரியர்கள், முத்தரசன் குடும்பத்தார்கள், பள்ளி மேலாண்மை குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# அரியலூரில் நடைபெற்ற 70–வது அகில இந்திய கூட்டுறவு வார விழாவில் போக்குவரத்துத் துறை அமைச்சர் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.



அரியலூர்,நவ.18–

அரியலூர் மாவட்டம், வாலாஜாநகரம், தனியார் திருமண மண்டபத்தில் கூட்டுறவுத் துறையின் சார்பில் நடைபெற்ற 70-வது அகில இந்திய கூட்டுறவு வார விழாவினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா தலைமையில், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் .க.சொ.க.கண்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்விழாவில் போக்குவரத்துத் துறை அமைச்சர் பயிர்கடன், கால்நடை பராமரிப்புகடன், மகளிர் சுய உதவிக்குழுக் கடன், மாற்றுத்திறனாளிகடன், டாப்செட்கோ கடன், மீன்வளர்ப்பு பராமரிப்புக் கடன், மத்தியகாலக் கடன், வீட்டு அடமானக்கடன், பணியாளர் கூட்டுறவு சங்க மத்திய கால கடன், நீர்பாசன கடன், வீட்டு வசதி கடன் உள்ளிட்ட பல்வேறு கடனுதவிகள் என மொத்தம் 4,482 பயனாளிகளுக்கு ரூ.33.41 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கி பேசினார்.

இக்கூட்டத்தில், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் ம.தீபாசங்கரி, அரியலூர் நகர்மன்றத் தலைவர் சாந்தி கலைவாணன், மாவட்ட வருவாய் அலுவலர், பொது மேலாளர் திருச்சி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் முத்துமாரி, மண்டல மேலாளர் டாப்செட் திருச்சி புண்ணியமூர்த்தி, மாவட்ட வழங்கல் அலுவலர் ராமலிங்கம், பொதுமேலாளர், திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி முருகன், மண்டல மேலாளர் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபகழகம் ராஜா, துணைப் பதிவாளர் (பொ.வி.தி) அறப்பளி, வருவாய் கோட்டாட்சியர் (அரியலூர்) ராமகிருஷ்ணன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் விஜயலட்சுமி, வாலாஜாநகரம் ஊராட்சி மன்றத்தலைவர் அபிநயா, பல்வேறு துறைகளின் அதிகாரிகள், கூட்டுறவுத்துறை அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் கூட்டுறவு சங்களின் பணியாளர்கள், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

# வரலாறு உலகம்

## மருத்துவமனைகளில் இஸ்ரேல் ராணுவம் சோதனை

# சிகிச்சைக்கு வழியில்லாமல் ஆபத்தில் ஆயிரக்கணக்கான உயிர்கள்




**காசாநகர் : நவ. 18,**

**காசாவில் தரைவழித் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ள இஸ்ரேல்ராணுவம்தற்போது குறிவைத்துள்ளது அங்குள்ள மருத்துவமனைகளை. அதிலும் குறிப்பாக அல் ஷிபா மருத்துவமனையில் இஸ்ரேல் ராணுவம் தொடர்ந்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளது.**

இது குறித்து காசா சுகாதார அமைச்சக செய்தித் தொடர்பாளர் அஷர்ஃப் அல் குத்ரா கூறுகையில், "இஸ்ரேல் தாக்குதலில் காயமடைந்த பெண்கள், குழந்தைகள், பாதிக்கப்பட்டவர்கள் என ஆயிரக்கணக்கானோர் உயிரிழக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. அல் ஷிஃபாவில் மூன்றாவது நாளாக இஸ்ரேல் ராணுவம் சோதனையில் ஈடுபட்டுள்ளது. ஹமாஸ் தலைமை கமாண்டர்கள் அங்குதான் பதுங்கியிருப்பதாக இஸ்ரேல் நீண்ட காலமாக நம்புகிறது. மருத்துவர்களையும் வெளியேற்றியுள்ளது." என்றார்.

ஜெனின் நகருக்குள் நுழைந்த இஸ்ரேல் ராணுவம் அங்குள்ள மருத்துவமனையை முற்றுகையிட்டுள்ளது. 80 ராணுவ வாகனங்கள் அங்கு நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. ஜெனின் மருத்துவமனையில் ஆம்புலன்ஸ் உள்பட ஓரிடத்தையும் விடாமல் இஸ்ரேல் ராணுவம் சோதனை செய்தது. அப்போது ஒலிப்பெருக்கி மூலம் அனைவரையும் வெளியேறும்படி கூறியது. அந்த மருத்துவமனையில் உள்ள மருத்துவர்கள் அனைவரும் கைகளைத் தூக்கியபடி வெளியேறுமாறு இஸ்ரேல் ராணுவம் உத்தரவிட்டது. அவர்கள் அவ்வாறு வெளியேறும் காட்சி அடங்கிய வீடியோ வெளியாகியுள்ளது.

அல் ஷிஃபா மருத்துவமனையில் மேற்கொண்ட சோதனையில் ஒரு வாகனத்தில் ஏராளமான AK-47 ரக துப்பக்கிகள், ஸ்னைப்பர் ரைஃபிள்கள், கிரனேடுகள், மற்ற வெடிப் பொருட்கள் இருந்ததாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது. அதேபோல், குழந்தைகளின் படுக்கைகளுக்குக் கீழ் இருந்து ராக்கெட் லாஞ்சர்கள், டாங்கர் எதிர்ப்பு மிசைல்கள் ஆகியனவற்றை ஹமாஸ் தீவிரவாதிகள் பதுக்கிவைத்துள்ளதாகவும் இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது. அது தொடர்பான வீடியோக்களையும் எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்துள்ளது.

அல் குத்ஸ் மருத்துவமனையிலும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளது. ரன்டிஸி மருத்துவமனையில் ஹமாஸ் படையினரின் சுரங்கப்பாதை கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாகக் கூறி வீடியோ ஆதரத்தையும் வெளியிட்டுள்ளது. சோதனைகள் ஒருபுறம் நடந்தாலும், 4000 லிட்டர் தண்ணீர் 1500 பொட்டலம் உணவை ஷிஃபா மருத்துவமனையில் வழங்கியுள்ளதாகவும் இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அளித்துள்ள பேட்டியில், "நாங்கள் காசாவில் பொது மக்களுக்கு பாதிப்பு இல்லாமல் ஹமாஸ் அழிப்பை மேற்கொள்ள முயற்சிக்கிறோம். ஆனால் அதில் நாங்கள் முழுமையாக வெற்றி பெற இயலவில்லை. இருப்பினும் குறைந்தபட்ச சேதாரத்துடன் எங்கள் வேலையை நாங்கள் முடிப்போம்" என்று கூறியுள்ளார்.

# "இஸ்ரேல் – ஹமாஸ் போரில் பொதுமக்கள் உயிர் சேதத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம்"

## பிரதமர் மோடி



**டெல்லி : நவ. 18,**

**இஸ்ரேல் - ஹமாஸ் போரை உலக நாடுகள் உற்று நோக்கிக் கொண்டிருக்கும் நிலையில், போரில் பொதுமக்கள் உயிரிழப்பு தொடர்ந்து அதிகரித்து வருவதற்கு பிரதமர் மோடி கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இரண்டாவது குளோபல் சவுத் உச்சி மாநாட்டின் தொடக்க விழாவில் பிரதமர் நரேந்திர மோடி பேசுகையில், "மேற்கு ஆசிய பிராந்தியத்தில் நடக்கும் நிகழ்வுகளில் இருந்து புதிய சவால்கள் உருவாகி வருவதை நாம் அனைவரும் பார்க்கிறோம். அக்டோபர் 7 ஆம் தேதி இஸ்ரேலில் நடந்த தீவிரவாத தாக்குதலுக்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது. இந்தப் பிரச்சினையில் நாங்கள் நிதானத்தையும் கடைப்பிடித்தோம். போர் குறித்த பேச்சுவார்த்தை மற்றும் ராஜதந்திரத்துக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளோம்.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான மோதலில் பொதுமக்கள் உயிரிழப்பதை வன்மையாகக் கண்டிக்கிறோம். போர் குறித்து பாலஸ்தீன அதிபர் மஹ்மூத் அப்பாஸிடம் பேசினேன். இந்தியா சார்பில் அவர்களுக்கு மனிதாபிமான உதவிகளையும் அனுப்பியுள்ளோம். உலகளாவிய நலனுக்காக குளோபல் சவுத் நாடுகள் ஒன்றுபட வேண்டிய நேரம் இது" என்றார்.

தொடர்ந்து பேசிய அவர், "செயற்கை நுண்ணறிவு காலத்தில், தொழில்நுட்பத்தை பொறுப்புடன் பயன்படுத்துவது முக்கியம். இதை மேலும் ஊக்குவிக்கும் வகையில், அடுத்த மாதம், குளோபல் பார்ட்னர்ஷிப் ஆஃப் ஆர்டிஃபிஷியல் உச்சி மாநாட்டை இந்தியா ஏற்பாடு செய்யும் என்றார்.

இஸ்ரேல் நாட்டின் மீது அக்டோபர் 7-ம் தேதியன்று பாலஸ்தீனத்தின் ஹமாஸ் குழு திடீர் தாக்குதலைத் நடத்தியது. அதைத் தொடர்ந்து இஸ்ரேலும் தொடர்ந்து தன்னுடைய எதிர்த் தாக்குதலை நடந்தி வருகிறது. இந்த மோதலில் குழந்தைகள், பெண்கள் உள்பட பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்திருக்கின்றனர். இந்த நிலையில், பாலஸ்தீனத்துக்கு ஆதரவாகவும், இஸ்ரேலுக்கு ஆதரவாகவும் உலக நாடுகள் இரண்டாகப் பிரிந்து கிடக்கின்றன.

பாலஸ்தீனத்துக்கு சீனா, ஈரான், சிரியா, லெபனான் முதலான நாடுகளும், இஸ்ரேலுக்கு இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளும் ஆதரவளித்திருக்கின்றன.

உலக நாடுகள் இந்தப் போரை உற்று நோக்கிக் கொண்டிருக்கும் நிலையில், இந்தியப்பிரதமர் மோடி, தன்னுடைய எக்ஸ் தளத்தில், "இஸ்ரேலில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்திய செய்தி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. எங்கள் பிரார்த்தனைகள் பாதிக்கப்பட்ட அப்பாவி மக்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்காகவே இருக்கின்றன. இந்தக் கடினமான நேரத்தில் இஸ்ரேலின் பக்கம் நாங்கள் ஒற்றுமையாக நிற்கிறோம்'' என்று இஸ்ரேலுக்கு ஆதரவாகப் பதிவிட்டிருந்தார்.

இந்தத் தாக்குதல்களில் இஸ்ரேல் ஏறத்தாழ 1,400 பேர் கொல்லப்பட்டனர். 239 பேரை காசா பகுதிக்குள் கடத்திச் சென்றனர். இதனால் இஸ்ரேல் ராணுவம் காசாவின் வட பகுதியில் வான்வழித் தாக்குதலில் ஈடுபட்டது. கடந்த 40 நாட்களுக்கும் மேலாக நடந்த தாக்குதலில் காசாவில் 11,000-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளர் என்பது குறிப்பிடத்தக்கது.

# துபாயை துவம்சம் செய்த கனமழை மூழ்கிய மருத்துவமனைகள், மிதக்கும் கார்கள்



**துபாய் : நவ. 18,**

**கடும் வெயில் சுட்டெரிக்கும் துபாயில் கடந்த சில நாட்களாக பெய்த கனமழையால் கடுமையான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் சாலைகளில் நிறுத்தப்பட்டிருந்த கார்கள் மூழ்கிகிடக்கின்றன. மருத்துவமனைகள், பள்ளிகளில்நீர்புகுந்துள்ளதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.**

ஐக்கிய அரபு அமீரகத்தில் வரலாறு காணாத மழை கொட்டி வருவதால் மக்களின் இயல்புவாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது. மருத்துவமனைகள், அலுவலகங்கள், வீடுகள் உள்ளிட்டவை மழை நீரில் மூழ்கியுள்ளதால் பொதுமக்கள் அச்சம் அடைந்துள்ளனர். இந்த மழைமேலும் நீடித்தால் பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்படும் எனக் கூறப்படுகிறது.


ஐக்கிய அரபு அமீரகத்தில் குளிர்காலம் தொடங்கி மக்களை உறைய வைத்து வந்த நிலையில், திடீரென நேற்று அதிகாலை முதலாக அந்நாட்டின் பல்வேறு பகுதிகளில் கனமழை கொட்டி வருகிறது. சுமார் 8 மணி நேரத்திற்கு மேலாக பயங்கர இடி, மின்னலுடன் மழைபெய்து வருவதால் துபாய், ஷார்ஜா, அபுதாபி போன்ற பல நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

வீடுகள், அலுவலகங்கள், பள்ளிக்கூடங்கள் ஆகியவற்றை மழை நீரில் மிதக்கின்றன. இதனால் பெரும்பாலான பள்ளிகள் மதியத்துடன் பிள்ளைகளைவீட்டிற்குஅனுப்பி விட்டன. அலுவலகங்களும் ஊழியர்களை வீட்டிற்கு செல்ல அறிவுறுத்தியுள்ளன. இதில் கொடுமையான விஷயம் என்னவென்றால், பல மருத்துவமனைகளுக்குள் மழை நீர் புகுந்தது தான். மழை நீர் புகுந்ததால் பல மருத்துவமனைகள் தங்கள் செயல்பாட்டைநிறுத்தியுள்ளன. மழை நீரால் மின் கசிவு போன்ற அசம்பாவிதங்கள் நிகழக்கூடும் என்பதால் சில மருத்துவமனைகளில்மின்சாரம் துண்டிக்கப்பட்டிருக்கிறது. இதனால் அவசர சிகிச்சை பிரிவு நோயாளிகள் வேறு தளங்களுக்கு மாற்றப்பட்டு வருகிறார்கள்.

இப்போதே பல மருத்துவமனைகளில் முதல் தளங்கள் கிட்டத்தட்ட மூழ்கும் நிலைக்கு வந்திருக்கின்றன. இந்நிலையில், மேலும் மழை பெய்தால்மருத்துவமனைகளில் செயல்பாடுகள் முற்றிலுமாக முடங்கும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றன. அதேபோல, மழை வெள்ளத்தால் பல சாலைகளிலும் போக்குவரத்து துண்டிக்கப்பட்டிருக்கின்றன. இதனால் ஐக்கிய அரபு அமீரக மக்கள் மத்தியில் ஒருவித அச்சம் நிலவுகிறது.

இந்நிலையில், இன்னும் ஓரிரு தினங்களுக்கு மழை நீடிக்கும் என்பதால் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு ஆன்லைன் வகுப்பில் பாடம் கற்பிக்ககல்விநிறுவனங்களுக்கு உத்தரவிட்டுள்ளது. அதேபோல, அரசு, தனியார் அலுவலர்களும் வீட்டில்இருந்தேபணிசெய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கிறார்கள். மேலும், அத்தியாவசிய தேவை இல்லாமல் மக்கள் வெளியே நடமாட வேண்டாம் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கிறார்கள். இதனிடையே, மருத்துவமனைகள், வீடுகள், அலுவலகங்களில் இருந்து மழை நீரை வெளியேற்றும் பணியில் அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

# மற்ற நாடுகளின் "சிங்கிள் இன்ச்" நிலத்தை கூட ஆக்கிரமிப்பு செய்யவில்லை : சீன அதிபர்



**அமெரிக்கா : நவ. 18,**

**சீனாவுக்கும் அண்டை நாடுகளாக இந்தியா, திபெத், தைவான் உள்ளிட்ட நாடுகளுக்கும் இடையில் எல்லை மற்றும் அதிகாரம் தொடர்பாக பிரச்சினை இருந்து வருகிறது. அடிக்கடி இந்திய எல்லைக்குள் ஊடுருவும் நிகழ்வு நடந்து வருகிறது. கல்வான் பகுதியில் ஊடுருவல் நடந்தபோது இரு ராணுவத்தினருக்கும் இடையில் கடும் மோதல் ஏற்பட்டது. இதில் இருதரப்பு ராணுவ வீரர்களும் உயிரிழந்தனர்.**

தைவான் நாட்டின் ஆட்சி அதிகாரம் தொடர்பாக சீனாவுக்கும் அந்நாட்டிற்கும் இடையில் மோதல் இருந்து வருகிறது. தற்போது சீன அதிபர் ஜி ஜின்பிங் அமெரிக்கா சென்றுள்ளார். அமெரிக்கா சென்றுள்ள அவர், ஜோ பைடனை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். மாநாட்டிற்கு இடையே அமெரிக்க-சீனா தொழில் கவுன்சில் மற்றும் அமெரிக்கா- சீனா உறவுக்கான கமிட்டி ஆகியவை ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

அருகில் உள்ள நாடுகளுடன் ஒரு பதற்றமான நிலை உருவாகி இருப்பது தொழில்துறைகளில் கவலை அளிப்பதாக தெரிவிக்கப்பட்டது. இதற்கு ஜி ஜின்பிங் பதில் அளிக்கையில் "சீனா மோதல் மற்றும் போரை தூண்டவில்லை. வெளிநாட்டு நிலத்தை சிங்கிள் இன்ச் கூட ஆக்கிரமிப்பு செய்யவில்லை" என்றார்.

ஜோ பைடன்- ஜி ஜின்பிங் சந்திப்பின்போது ஜோ பைடன், திபெத் மற்றும் ஹாங்காங்கின் மனித உரிமை துஷ்பிரயோகம் குறித்து தனது கவலையை தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# காஷ்மீர் திரும்புவதற்காக காத்திருக்கிறேன் காசாவில் இருந்து மீட்கப்பட்ட இந்திய பெண் பேட்டி



**கெய்ரோ : நவ. 18,**

**இஸ்ரேலிய படைகளின் தாக்குதலால் நிலை குலைந்திருக்கும் காசாவில் காஷ்மீரை சேர்ந்த லுப்னா நசீர் ஷாபூ என்ற பெண்ணும், அவரது மகள் கரிமாவும் வசித்து வந்தனர்.**

போர் உக்கிரம் அடைந்ததை தொடர்ந்து தங்களை மீட்குமாறு மத்திய அரசுக்கு அவர்கள் கோரிக்கை விடுத்தனர். அதன்படி இஸ்ரேல் மற்றும் எகிப்தின் கெய்ரோவில் உள்ள இந்திய தூதரகங்கள் அவர்களை பத்திரமாக மீட்டன. இதைத்தொடர்ந்து அவர்கள் கடந்த 13-ந்தேதி காசா எல்லையை கடந்து எகிப்தின் கெய்ரோ சென்றடைந்தனர். தற்போது அங்கிருந்து காஷ்மீர் திரும்ப இருப்பதாக லுப்னா கூறியுள்ளார்.

இது தொடர்பாக பி.டி.ஐ. நிறுவனத்துக்கு அவர் அளித்த பேட்டியில், 'காசாவில் இருந்து ரபா எல்லை வழியாக பத்திரமாக வந்தோம். தற்போது காஷ்மீர் திரும்புவதற்காக காத்திருக்கிறேன்' என தெரிவித்தார். காசா நிலவரம் குறித்து அவர் கூறும்போது, 'காசாவில் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. எங்களிடம் தண்ணீர், மின்சாரம் அல்லது இன்டர்நெட் எதுவும் இல்லை. தொலைத்தொடர்பு மிகவும் மோசமாக இருந்தது. நாங்கள் அங்கு மிகவும் மோசமான நிலையில் இருந்தோம். நாளுக்கு நாள் நிலைமை மோசமாகி வருகிறது. தினம் தினம் செத்து மடிவோரும் உண்டு, காயம் அடைபவர்களும் உண்டு, இடிபாடுகளுக்கு அடியில் கிடப்பவர்களும் உண்டு' என பதறியடி கூறினார். தன்னை மீட்டதற்காக மத்திய அரசுக்கும், இந்திய தூதரகங்களுக்கும் அவர் நன்றியும் தெரிவித்தார்.

# ஸ்பெயின் நாட்டின் பிரதமராக மீண்டும் தேர்வானார் பெட்ரோ சான்செஸ்



**ஸ்பெயின் : நவ. 18,**

**பிரிவினைவாதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்குவது குறித்த சர்ச்சைகளுக்கு இடையே ஸ்பெயினின் பிரதமராக பெட்ரோ சான்செஸ் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.**

ஸ்பெயினில் ஜூனில் நடந்த தேர்தலில் மத்திய வலது பாப்புலர் கட்சி தேர்தலில் அதிக வாக்குகளை பெற்றது. ஆனால் மூன்றாவது இடத்தை பிடித்த தீவிர வலதுசாரி வோக்ஸ் கட்சியுடன் கூட்டணி அமைத்ததால் அரசு அமைப்பதற்கான ஆதரவை பெற முடியவில்லை. இந்நிலையில் பொறுப்பு பிரதமராக இருந்த பெட்ரோ சான்செஸின் சோசலிச கட்சியானது 121 இடங்களை பிடித்து இரண்டாவது இடத்தை பிடித்தது. ஆனால் ஆட்சி அமைப்பதற்கு போதுமான ஆதரவை பெறவேண்டி இருந்தது.

இந்நிலையில் 2 நாட்கள் விவாதத்திற்கு பிறகு நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடந்தது. இந்த வாக்கெடுப்பில் 350 உறுப்பினர்கள் கொண்ட கீழவையில் 179 பேர் பெட்ரோ சான்செஸ்சுக்கு ஆதரவாக வாக்களித்தனர். வலது சாரி எதிர்கட்சிகள் மட்டும் அவருக்கு எதிராக வாக்களித்திருந்தனர். இதனை தொடர்ந்து ஸ்பெயின் பிரதமராக பெட்ரோ சான்செஸ் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

# ஒசாமா பின்லேடனின் வைரல் கடிதத்தால் அதிர்வலை

## டிக் டாக் தடை கோரும் அமெரிக்கர்கள்



**நியூயார்க் : நவ. 18,**

**கடந்த 2002-ல் அமெரிக்காவில் இரட்டை கோபுரத்தாக்குதலைநடத்திய பிறகு தீவிரவாத அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லேடன், 'அமெரிக்கர்களுக்கு ஒரு கடிதம்' என்று ஒரு கடிதம் எழுதி இருந்தார். அது, அமெரிக்காவில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஒரே நாளில் சமூக வலைதளங்களில் வைரல் ஆனது.**

இந்தச் சூழலில் அந்நாட்டில் சீன நாட்டு செயலியான டிக் டாக் செயலியை தடை செய்ய வேண்டுமென்ற முழக்கத்தை அமெரிக்க நாட்டை சேர்ந்த அரசியல் பிரபலங்கள் முன்னெடுத்துள்ளனர்.

சமூக வலைதளங்களில் ஒரு கன்டென்ட் எப்போது வைரலாகும் என்பதை கணிக்கவே முடியாது. அந்த வகையில் தான் கடந்த 21 ஆண்டுகளுக்கு முன்னர் ஒசாமா பின்லேடன், அமெரிக்கர்களுக்கு எழுதிய கடிதமும் வைரல் ஆகியுள்ளது. முதலில் டிக் டாக் செயலியில் இது பகிரப்பட்டுள்ளது. அப்படியே காட்டுத் தீ போல மற்ற சமூக வலைதளங்களிலும் வைரல் ஆகியுள்ளது. இரட்டை கோபுரத் தாக்குதலில் சுமார் 3,000 பேர் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலுக்கு பிறகு அமெரிக்க மக்களுக்கு கடிதம் எழுதி இருந்தார் பின்லேடன். அதில் தங்கள் அமைப்பின் செயலை நியாயப்படுத்தி இருந்தார். கடந்த 2011-ல் பாகிஸ்தானில் பதுங்கி இருந்த பின்லேடனை சுட்டுக் கொன்றது அமெரிக்கா.

இந்தச் சூழலில் சுமார் 21 ஆண்டுகளுக்கு பிறகு 'ஜென் Z' தலைமுறையினரின் பார்வைக்கு அந்தக் கடிதம் கிடைத்துள்ளது. இதில் பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக பின்லேடன் கருத்து சொல்லி உள்ளதாக சொல்லபடுகிறது. தற்போது நடைபெற்று வரும் இஸ்ரேல்-ஹமாஸ் இடையிலான போரை மையப்படுத்தி இது மீண்டும் பகிரப்பட்டுள்ளது. அமெரிக்காவில் சமூக வலைதளங்களில் ஒசாமா பின்லேடனின் கடிதம் வைரல் ஆனதும் 'தி கார்டியன்' செய்தி நிறுவனம் தங்களது தளத்தில் இருந்து அதனை நீக்கி உள்ளது. அதற்கான காரணம் எதையும் தெரிவிக்கவில்லை. தங்களது தளத்தில் கடந்த 2002 முதல் கார்டியன் வைத்திருந்தது. தற்போது நீக்கப்பட்டுள்ளது.

இந்தச் சூழலில் ஒசாமா பின்லேடனின் கருத்துக்கு ஆதரவாக சமூக வலைதளங்களில் பதிவுகள் பகிரப்பட, அது அமெரிக்க அரசியல் அமைப்பு தலைவர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. குறிப்பாக, குடியரசுக் கட்சியை சேர்ந்தவர்கள் தங்களது எதிர்ப்பை தெரிவித்துள்ளனர்.

குடியரசுக் கட்சியை சேர்ந்த நிக்கி ஹேலே, "அமெரிக்கர்கள் மீது ஆதிக்கத்தை செலுத்தும் சீன கம்யூனிஸ்ட் கட்சி சித்தாந்தத்துக்கு வாய்ப்பு வழங்குவதை நிறுத்துங்கள். பல ஆயிரம் பேரை கொன்ற தீவிரவாதி பின்லேடனுக்கு ஆதரவாக சமூக வலைதள பயனர்கள் உள்ளனர். இது அந்நியர்கள் சமூக வலைதளத்தில் மேற்கொள்ளும் விஷமத்தனம் வாய்ந்த கொள்கைக்கு உதாரணம். டிக் டாக்கை தடை செய்யுங்கள்" என தெரிவித்துள்ளார்.

அமெரிக்க செனட் உறுப்பினரும், குடியரசுக் கட்சியை சேர்ந்தவருமான மார்ஷா பிளாக்பர்னும் டிக் டாக் செயலிக்கு தடை விதிக்க வேண்டும் என தெரிவித்துள்ளார். அமெரிக்காவில் எதிர்ப்பு குரல் எழுந்த நிலையில் ஒசாமா கடிதம் சார்ந்த பதிவுகளை டிக் டாக் தளம் நீக்கி வருவதாக தகவல். இந்தப் பதிவுகள் தங்களது கொள்கை முடிவுகளை மீறி உள்ளதாக டிக் டாக் பதிலும் தந்துள்ளது.

கடந்த 2020-ம் ஆண்டு இந்தியாவில் டிக் டாக் செயலிக்கு தடை விதிக்கப்பட்டது. அப்போது மாதத்துக்கு சுமார் 150 மில்லியன் ஆக்டிவ் பயனர்களை டிக் டாக் இந்தியாவில் கொண்டிருந்தது. இந்தியா மட்டுமல்லாது பல்வேறு உலக நாடுகள் டிக் டாக் செயலிக்கு தடை விதித்துள்ளன. இந்தப் பட்டியலில் நேபாளம் அண்மையில் இணைந்தது குறிப்பிடத்தக்கது.

# ——— இந்தியாவுக்கு ஓடி விடு ———

## ஆஸ்திரேலியாவில் சீக்கியர் மீது இனவெறி தாக்குதல்



**ஆஸ்திரேலியா : நவ. 18,**

**ஆஸ்திரேலிய நாட்டில் சீக்கியர் ஒருவருக்கு எதிராக தொடர்ந்து இனவெறி தாக்குதல் நடத்தப்பட்டு வருவது அதிர்ச்சியை உருவாக்கியுள்ளது.**

ஆஸ்திரேலிய நாட்டில் உள்ள தாஸ்மானியாவில் ஹோபர்ட் பகுதியில் உணவு விடுதி ஒன்றை வைத்து ஜர்னைல் சிங் என்னும் சீக்கியர் நடத்தி வருபவர். இவர் மீது கடந்த 2 முதல் 3 மாதங்களாகத் தொடர்ந்து இனவெறி தாக்குதல் நடத்தப்படுகிறது.

இது குறித்துப் பேசிய ஜர்னைல் சிங், 'முன்பு ஒருபோதும் இதுபோன்று எனக்கு நடந்தது இல்லை. கடந்த இரண்டு, மூன்று மாதங்களாகவே தொடர்ந்து பல்வேறு முறை இனவெறி தாக்குதல் நடத்தப்படுகிறது. இந்த தாக்குதல் சொந்த நாட்டுக்கு செல்லும்படியும், காரில் நாயின் கழிவுகளை கொட்டியும் தொடர்கிறது. மனரீதியாக இது பெரிய அழுத்தம் ஏற்படுத்துகிறது. கடந்த 4 முதல் 5 நாட்களாக எனது வீட்டுக்கு வெளியே காரின் கதவு கைப்பிடியில் நாயின் கழிவுகளைப் பூசிவிட்டுச் சென்றனர்.

மேலும் இனவெறியைத் தூண்டும் வகையில் கார் நிறுத்தும் பகுதியில் சுவரின் மீது, இந்தியனே, சொந்த நாட்டுக்குச் செல் என்ற வாசகங்கள் எழுதப்பட்டு இருந்தன. காவல்துறையிடம் இது குறித்து புகார் அளித்தும் காணொளி சான்று இல்லாமல், இதன் பின்னணியில் உள்ளவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாத நிலை உள்ளது' எனக் கூறியுள்ளார்.

கடந்த 15 ஆண்டுகளாக ஆஸ்திரேலியாவில் வசித்து வரும் அவர், 10 ஆண்டுகளாக தாஸ்மானியாவில் உள்ளார். அவருக்குத் தொடர்ந்து, இரு முறை இனவெறி மற்றும் மிரட்டல் கடிதங்களும் வந்துள்ளன. அவரது காருக்கு சேதம் ஏற்படும் என்று மிரட்டலும் விடப்பட்டு உள்ளது. தாஸ்மானியா காவல் துறை உயரதிகாரி ஜேசன் எல்மர் இந்த சம்பவம் பற்றி விசாரணை செய்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

# மயிலாடுதுறையில் மகனை பள்ளியில் விட்டு விட்டு ஸ்கூட்டியில் வீடு திரும்பிய பெண் லாரி மோதி பலி



மயிலாடுதுறை, நவ. 18-
மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை அருகே சோழம்பேட்டை மெயின் ரோட்டை சேர்ந்தவர் முத்து மனைவி ராஜேஸ்வரி.41. கணவர் வெளிநாட்டில் வேலை செய்து வருகிறார். இந்நிலையில் ராஜேஸ்வரி வெள்ளிக்கிழமை ஸ்கூட்டியில் தனது மகனை அழைத்துச் சென்று மயிலாடுதுறையில் உள்ள தனியார் பள்ளியில் விட்டுவிட்டு வீடு திரும்பி உள்ளார். ஏவிசி திருமண மண்டபம் சாலையில் வந்து தென்னை மர சாலையில் திரும்பிய போது எதுவே அதிவேகமாக வந்த லாரி மோதியதில் நிலை தடுமாறி கீழே விழுந்த ராஜேஸ்வரி மீது லாரியின் பின் சக்கரம் ஏறியதில் சம்பவ இடத்திலேயே தலை நசுங்கி உயிரிழந்தார்.

மயிலாடுதுறை காவல் துறை கண்காணிப்பாளர் செல்வம் தலைமையிலான போலீசார் ராஜேஸ்வரியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததுடன், லாரி டிரைவர் கரூர் மாவட்டம் குன்னம் சத்திரத்தை சேர்ந்த பாலசுப்பிரமணியன் என்பவரை கைது செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர். இச்சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இலவச வேட்டி, சேலை திருட்டு

## நில அளவை கள உதவியாளர் முன்ஜாமீன் தள்ளுபடி



மதுரை , நவ. 18-
மதுரை ஆட்சியர் அலுவலக கருவூலத்தில் வைக்கப்பட்டிருந்த இலவச வேட்டி, சேலைகள் திருடப்பட்ட வழக்கில் நில அளவை கள உதவியாளரின் முன்ஜாமீன் மனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள கருவூலத்தில் தமிழக அரசு சார்பில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கும் இலவச வேட்டி, சேலைகள் வைக்கப்பட்டிருந்தது. இந்த கருவூலத்தில் இருந்து நவ.7-ல் ரூ.15 லட்சம் மதிப்புள்ள 12500 வேட்டி சேலைகள் திருடப்பட்டன. இது தொடர்பாக தல்லாகுளம் போலீஸார் வழக்கு பதிவு செய்து 4 பேரை கைது செய்தனர்.

இந்த வழக்கில் முன்ஜாமீன் கோரி நில அளவை கள உதவியாளர் சரவணன் உயர் நீதிமன்ற கிளையில் மனு தாக்கல் செய்தார். அதில், 'வேட்டி, சேலை திருட்டு சம்பவத்தில் எனக்கு தொடர்பு இருப்பதாக கைது செய்யப்பட்டவர்கள் போலீஸில் தெரிவித்துள்ளனர். நான் நில அளவை கள உதவியாளராக பணிபுரிகிறேன். எனக்கும் வேட்டி, சேலை திருட்டுக்கும் தொடர்பு இல்லை. எனவே முன்ஜாமீன் வழங்க வேண்டும்" எனக் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதி சிவஞானம் முன்பு விசாரணைக்கு வந்தது. அரசு வழக்கறிஞர் வாதிடுகையில், "மனுதாரர் திருட்டுக்கு மூளையாக செயல்பட்டுள்ளார். அவரை கைது செய்து விசாரிக்க வேண்டியதுள்ளது. இதனால் முன்ஜாமீன் வழங்கக் கூடாது" என்றார். இதையடுத்து நீதிபதி, "இலவச வேட்டி, சேலைகள் எங்கு வைக்கப்பட்டுள்ளது, அந்த அலுவலக கதவை மனுதாரர் திறந்து விட்டதாகவும் வழக்கில் கைதானவர்கள் போலீஸில் தெரிவித்துள்ளனர். இதனால் மனுதாரருக்கு முன்ஜாமீன் வழங்க முடியாது. மனு தள்ளுபடி செய்யப்படுகிறது" என உத்தரவிட்டார்.

### சென்னை புதுவண்ணாரப்பேட்டையில் கல்லூரி மாணவியை

# காதலிப்பதாக கூறி மயக்க மருந்து கொடுத்து பாலியல் வன்கொடுமை செய்த சட்டம் படித்தவர் கைது



சென்னை,நவ,18
சென்னை புதுவண்ணாரப்பேட்டை பகுதியைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் அப்பகுதியில் உள்ள அரசு கலைக் கல்லூரியில் பி ஏ பொருளாதாரம் முதலாம் படித்து வருகிறார். திருவொற்றியூர் சாத்தான்காடு நெடுஞ்சாலை பகுதியில் வசித்து வருபவர் உதய பாஸ்கர் (28) இவர் ஆந்திராவில் சட்ட படிப்பை முடித்துள்ளார். ஆனால் பார் கவுன்சிலில் தன்னை வக்கீலாக பதிவு செய்யப் வில்லை என கூறப்படுகின்றது.

இந்த நிலையில் கடந்த 2021 ஆண்டு உதய பாஸ்கருக்கு கல்லூரி மாணவி அறிமுகம் ஆகி இருவரும் நட்பாக பழகி வந்தனர். பின்னர் மாணவியை காதலிப்பதாக கூறிய உதய பாஸ்கர் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு மாணவியை தனது நண்பர் வீட்டிற்கு அழைத்து சென்று ஆசைக்கு இனங்கும் படி கூறி உள்ளார். ஆனால் கல்லூரி மாணவி இதற்கு ஒத்துகொள்ளவில்லை, இதனால் அவர் மாணவிக்கு தெரியாமல் கூல்டிரிங்ஸில் மயக்க மருந்து கொடுத்து மாணவியிடம் உல்லாசமாக இருந்ததை வீடியோவாக எடுத்து வைத்துகொண்டுதாக கூறப்படுகிறது.பின்னர் வீடியோவில் பதிவு செய்ததை காட்டி மாணவியை மிரட்டி பலமுறை உல்லாசம் வைத்திருந்துள்ளார்.

இந்நிலையில் உதய பாஸ்கருக்கு ஏற்கனவே திருமணமாகி குழந்தை இருப்பதை அறிந்து கொண்டகல்லூரிமாணவி அவரிடம் பேசுவதை தவிர்த்து வந்துள்ளார். இதனையடுத்து நேற்று அதிகாலை கல்லூரி மாணவியின் வீட்டிற்கு குடிப்போதையில் சென்ற உதய பாஸ்கர் கதவை தட்டி தான் கூப்பிடும்போது உறவுக்கு வரவேண்டும் வரவில்லை என்றால் தான் வைத்திருக்கும் போட்டோ மற்றும் வீடியோக்களை சமூக வலைதளங்களில் பரப்பி விடுவதாக மிரட்டி விட்டு சென்றுள்ளார்.

இச்சம்பவம் குறித்து திருவொற்றியூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் மாணவியின் பெற்றோர் உதயபாஸ்கர் மீது புகார் அளித்தனர். புகாரின் பேரில் போலீசார் உதயபாஸ்கர் மீது இந்திய தண்டனை சட்டம் 323,324,506 ஆகிய மூன்று பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்து தலைமறைவாக உள்ள உதய பாஸ்கரை திருவொற்றியூர் உதவி ஆணையர் உத்தரவின் பேரில் இரண்டு தனிப்படைகள் அமைக்கப்பட்டு தேடி வந்த நிலையில் திருவொற்றியூர் நெடுஞ்சாலை தாங்கல் பேருந்து நிலையம் அருகே நின்று கொண்டு இருந்த உதயபாஸ்கரை போலீசார் கைது செய்து காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து விசாரணை மேற்கொண்டு பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.ஏற்கனவே இவர் மீது சென்னை புதுவண்ணாரப்பேட்டை காவல் நிலையத்தில் இரண்டு வழக்குகள் உள்ளன

### நீட் தேர்வு ரத்து செய்ய வேண்டும் என

# 50 நாள் 50 லட்சம் கையெழுத்து இயக்கம் கிராம மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்று கையெழுத்திட்டனர்



காஞ்சிபுரம், நவ,18
தமிழகத்தில் நீட் தேர்வுக்கு விலக்கு கோரி திமுக சார்பில் மாணவரணி இளைஞர் அணி உள்ளிட்ட பிரிவுகள் பல்வேறு போராட்டங்களில் முனெடுத்து வருகிறது. அந்த வகையில் 50 நாட்கள், 50 லட்சம் நீட் எதிர்ப்பு கையெழுத்துக்கள் எனும் பிரச்சார திட்டத்தினை விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைத்தார்.

அதன் தொடர்ச்சியாக காஞ்சிபுரம் முட்டவாக்கம் பகுதியில் கிராம மக்களில் நீட் தேர்வு விலக்குநம்இலக்கு எனும் கொள்கையை விளக்கப்பட்டது. நீட் தேர்வுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கிராம மக்கள் கையெழுத்துட்டு தபால் கடிதங்களை எழுதி தங்களது எதிர்ப்பினை பதிவு செய்தனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சிகுழு துணை பெருந்தலைவர் நித்தியா சுகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்எஸ் சுகுமார், ஊராட்சிமன்ற தலைவர் தெய்வானை சுரேஷ்பாபு மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



▶ திருப்பூர் கலெக்டர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்கம் மற்றும் திருப்பூர் மாவட்ட நிர்வாகம் இணைந்து நடத்தும் மாபெரும் இலவச பொது மருத்துவ முகாமினை கலெக்டர் கிறிஸ்துராஜ் தொடங்கி வைத்தார். உடன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் லட்சுமணன், தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்க நிர்வாகிகள் உள்ளனர்.

# மயிலாடுதுறையில் முடவன் முழுக்கு தீர்த்தவாரி பக்தர்கள் புனித நீராடி இறைவனை தரிசித்தனர்





மயிலாடுதுறை, நவ. 18-
மயிலாடுதுறை மாவட்டம்மயிலாடுதுறை காவிரிதுலாக்கட்டத்தில் புகழ்பெற்றதுலா உற்சவம் ஐப்பசி மாதம் 30 நாட்களும் நடைபெற்றது. கங்கை முதலான புண்ணிய நதிகள் ஐப்பசி மாதம், காவிரியில் நீராடி, இறைவனை வழிபட்டு, தங்கள் பாவத்தை போக்கியதாக புராணம். அதன்படி, காவிரியில் ஐப்பசி மாதம் நீராட விரும்பிய, உடல் ஊனமுற்ற ஒரு பக்தர், ஐப்பசி மாதம் முடிவதற்குள், மயிலாடுதுறை காவிரிக்கரைக்கு வரமுடியவில்லை. அந்த பக்தருக்காக மனம் இரங்கிய இறைவன், முடவனுக்கு ஐப்பசி மாதம் முடிந்த மறுநாள், காவிரியில் நீராடிய பலனை அளித்தார். அதன்படிஆண்டுதோறும் கார்த்திகை 1ஆம் நாள், முடவன் முழுக்கு என்ற பெயரில் தீர்த்தவாரி நடைபெற்று வழக்கம்.

இதனை முன்னிட்டு, மயிலாடுதுறைமயூரநாதர் கோயிலில் இருந்து மனோன்மணிஉடனாகிய சந்திரசேகர சுவாமி காவிரி துலாக்கட்டத்திற்கு எழுந்தருளினார். அங்கு அஸ்திர தேவருக்கு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது. தொடர்ந்து காவிரியில் அஸ்திர தேவருக்கு பால், பன்னீர், சந்தனம் ஆகியவை ஊற்றி அபிஷேகம், ஆராதனைகள் நடைபெற்றது. தொடர்ந்து நடைபெற்றதீர்த்தவாரியில் ஏராளமான பக்தர்கள் காவிரியில் புனித நீராடி இறைவனை வழிபட்டனர்.

# மயிலாடுதுறை மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழா "முத்தமிழ்த்தேர் " அலங்கார ஊர்தி வருகை



மயிலாடுதுறை, நவ. 18-
மயிலாடுதுறை மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மயிலாடுதுறை நகராட்சி பகுதிக்கு "முத்தமிழ்த்தேர்" அலங்கார ஊர்தி வருகைதந்ததை மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி, மயிலாடுதுறை நாடாளுமன்றஉறுப்பினர் செ.இராமலிங்கம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் ஆகியோர் வரவேற்று, அலங்கார ஊர்தியில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, அனைத்து தரப்பு மக்களுக்கும் ஒரு நிலையானபங்களிப்பைத் தரவேண்டும் என்ற நோக்கத்தோடு நடத்தப்படவேண்டும் என்பதற்காகமாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 12 குழுக்கள் அமைக்கப்பட்டன. அதில், "எழுத்தாளர்- கலைஞர்" குழு, படைப்புலகின் முடிசூடா மன்னராகத் திகழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு ஆற்றிய அரும்பணிகளில் அவரது பரிமாணங்களைப் போற்றும் வகையில் பல்வேறு முன்னெடுப்புகளை செயல்படுத்தி வருகிறது.

அந்தவகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழுக்கு மேலும் புகழ் சேர்க்கும் வகையில்இன்றையஇளம் தலைமுறையினருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முகத்தன்மையினை எடுத்து செல்லும் வகையில், எழுத்தாளர் கலைஞர் குழுவின் மூலம் அவரது புகழ்பாடும் "முத்தமிழ்த்தேர்" - அலங்கார ஊர்தி 04.11.2023 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடங்கி அனைத்து மாவட்டத்திற்கு சென்று கடைசியாக 04.12.2023 அன்று சென்னையில் முடிவடையும். இவ்வாகனம் இன்றையதினம் மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி, செம்பனார்கோயில், மயிலாடுதுறை ஆகிய பகுதிகளுக்குவருகைதந்தது இந்த வாகனம் "எழுத்தே எனது மூச்சு, எழுதுவதே எனது இன்பமூக்கம்" என்ற முழங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பயன்படுத்திய பேனா வடிவில் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாகனத்தில் முத்தமிழறிஞர் கலைஞரின் பன்முக ஆற்றலையும், அவர் தமிழ் சமூகத்திற்கு படைத்தளித்த மக்கள் நலத் திட்டங்களையும் தமிழ்நாடு முழுவதும் கொண்டு செல்லும் வகையில் "முத்தமிழ்த்தேர்" அலங்கார ஊர்தி அனைத்து மாவட்டங்களிலும் காட்சிப்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. கலைஞர் அவர்களின் அவர்களின் சிறப்புகளை விளக்கும் குறும்படம் தொடர்ந்து திரையிடும் வகையில் ஒளித்திரையும் அமைக்கப்பட்டுள்ளது. பேனாவடிவிலான இந்த வானகத்தின் பின்புறம் இயந்திரத்தினால் திறந்து மூடும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அலங்கார ஊர்தியினை பொதுமக்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் உள்ளிட்ட அனைவரும் சென்று பார்வையிடும் வகையில் வாகனத்தின் உள்ளே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கோபாலபுர இல்ல உள்அமைப்பிபடித்தத்ருபமாக அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் உள்ளே அஞ்சுகம் அம்மாள் அவர்களின் உருவச்சிலையும் அதன் அருகில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இருக்கையில் அமர்ந்திருப்பது போன்ற உருவச்சிலையும், அவர் பயன்படுத்திய நூலகத்தின் மாதிரி வடிவமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் அருகில் நின்று பொதுமக்கள்நுடைகளை எடுத்துக்கொள்ளும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எழுத்துக்களுக்கு வடிவம் கொடுக்கும் அவரது படைப்புகளும், அவரது பன்முகத் தோற்றத்தினை விளக்கும் ஒலி, ஒளி அமைப்பும் உருவாக்கப்பட்டு காட்சிப்படுத்தப் பட்டுள்ளது. கலைஞரின் எழுத்துகளால் உயிர்ப்பெற்ற கவிதை, கட்டுரை, புதினங்கள், காப்பியங்கள் போன்றவற்றை கைப்பேசி வாயிலாக இன்றைய இளம் தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையில் ஒக ஊஹஙந ஸுஉஆ மூலம் பெறும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த அலங்கார ஊர்தியானது மயிலாடுதுறை காரைக்கால்எல்லையான நண்டலாறு பகுதியில் மயிலாடுதுறை மாவட்ட சார்பில் வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. தொடர்ந்து தரங்கம்பாடி வட்டம், தரங்கம்பாடி கடைவீதி, செம்பனார்கோயில் கடைவீதி கலைமகள் பள்ளி அருகில் மற்றும் மயிலாடுதுறை நகராட்சி அலுவலகம் ஆகிய பகுதிகளில், பெண்களின் மலர் தூவி இசை நிகழ்ச்சியுடன் வரவேற்று காட்சிப்படுத்தப் பட்டது. பள்ளி மாணவ மாணவிகள் ஏராளமானோர் பார்வையிட்டுகலைஞரின் திருவுருவ சிலைக்கு மரியாதை செலுத்தினர்.

தொடர்ந்து அலங்கார ஊர்தியில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவச் சிலைக்கு மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி, மயிலாடுதுறை நாடாளுமன்றஉறுப்பினர் செ.இராமலிங்கம், மயிலாடுதுறைசட்டமன்ற உறுப்பினர் எஸ். ராஜகுமார், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். மேலும், பள்ளி மாணவர்களுக்கு எழுதுகோல் மற்றும் மரக்கன்றுகள் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் மு.மணிமேகலை, மாவட்ட சமூக நல அலுவலர் சுகிர்தாதேவி, செம்பனார்கோவில் ஒன்றிய பெருந்தலைவர் நந்தினி ஸ்ரீதர், தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுண சங்கரி, மயிலாடுதுறை நகர்மன்றத் தலைவர் என்.செல்வராஜ், மயிலாடுதுறை ஒன்றியக்குழு தலைவர் காமாட்சி மூர்த்தி, சீர்காழி நகர்மன்றத் தலைவர் துர்கா பரமேஸ்வரி, வைத்தீஸ்வரன்கோயில் பேரூராட்சித் தலைவர் பூங்கொடி, மணல்மேடு பேரூராட்சித் தலைவர் கண்மணி, குத்தாலம் ஒன்றியக்குழுத் தலைவர் மகேந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்; கலந்துகொண்டனர்.

# ஹரியாணா : பூஜைக்கு சென்ற பெண்கள் மீது கல்வீச்சு – நூ நகரில் புதிய பதற்றம்



சண்டீகர் : நவ. 18,
ஹரியானா மாநிலம் நூவில்மசூதிஒன்றிலிருந்து அடையாளம் தெரியாத சிறுவர்கள் சிலர் பூஜைக்குச் சென்ற பெண்கள் மீது கற்கள் வீசியதால் அங்கு புதிய பதற்றம் ஏற்பட்டுள்ளது.

நூ மாவட்டத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பூஜைக்குச் சென்ற பெண்கள் சிலர் மீது அங்குள்ள மசூதியில் இருந்து சிறுவர்கள் சிலர் கற்களை வீசியதாகக் கூறப்படுகிறது. இந்தக் கல்வீச்சில் பெண்கள் காயமடைந்தனர். இந்த கல்வீச்சுசம்பவத்தினைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் இரண்டு பிரிவினைச் சேர்ந்த பெண்களும் கூடினர். இதனால் அங்கு புதிய பதற்றம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து நூ எஸ்.பி. போலீஸ் படையுடன் சம்பவ இடத்துக்குச் சென்று மக்களைச் சமாதானப்படுத்தினார். மேலும் அந்த மசூதி மவுலானாவிடம் விசாரணை நடத்தினார்.

இது குறித்து நூ காவல்துறை கண்காணிப்பாளர் நரேந்திர பிஜர்னியா கூறுகையில், "போலீஸாருக்கு சில வீடியோ காட்சிகள் கிடைத்துள்ளன. அதில் சிறுவர்கள்சிலர் பூஜைக்கு செல்லும் பெண்கள் மீது கற்கள் வீசுகின்றனர். சம்பவம் நடந்த மசூதியில்சிலகட்டுமான வேலைகள் நடந்து வருகின்றது. இச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 8.20 மணிக்கு நடந்துள்ளது. இச்சம்பவம் தொடர்பாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. நாங்கள் வீடியோவில் உள்ள சிறுவர்களிடம் விசாரிக்க உள்ளோம்" என்று தெரிவித்தார்.


முன்னதாக, ஹரியானா மாநிலம் குருகிராமை ஒட்டிய நூ பகுதியில் கடந்த ஜூலை 31ம் தேதி விஷ்வ ஹிந்து பரிஷத் சார்பில் பிரிஜ் மண்டல் ஜலாபிஷேக் யாத்ரா நடைபெற்றது. இந்த யாத்திரை குருகிராம் – ஆல்வார் இடையே வந்தபோது இளைஞர்கள் குழு ஒன்று தடுத்து நிறுத்தியது. தேசிய நெடுஞ்சாலைப் பகுதியான அந்தப் பகுதியில் இளைஞர்கள் ஊர்வலத்தின் மீது கல்வீசி தாக்குதல் நடத்தப்பட்டது. இதையடுத்து இரு தரப்பும் மோதிக்கொள்ள கலவரம் மூண்டது. இதில் ஊர்காவல் படையைச் சேர்ந்தவர்கள் உட்பட 6 பேர் பலியாகினர். இந்தக் கலவரத்தைத் தொடர்ந்து நூவின் எஸ்.பி.யாக இருந்த வருண் சிங்லா மாற்றப்பட்டு, நரேந்திர பிஜர்னியா நூவின் எஸ். பி.யாகபொறுப்பேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



# அண்ணா பல்கலை: தேர்வு கட்டண உயர்வு செமஸ்டருக்கு பொருந்தாது

# விஜய் மக்கள் இயக்கம் சார்பில் நூலகம் திட்டம்: இன்று தாம்பரத்தில் துவக்கம்





# சேலம்: அரசு பேருந்தில் டிக்கெட் மறுவிற்பனை நடத்துனர் பணியிடை நீக்கம்


| சென்னை / புதுக்கோட்டை | 18.11.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**திருமலை கிருஷ்ணமாச்சாரி** , இந்திய யோகா ஆசிரியர் (பி.1888) (இ.1989)



**பதுகேஷ்வர் தத்** , இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி.1910) (இ.1965)



**மகிந்த ராசபக்ச** , இலங்கையின் 6வது அரசுத்தலைவர் (பி.1945)



**நயன்தாரா** , தென்னிந்தியத் திரைப்பட நடிகை (பி.1984)



## இன்றைய நினைவு நாள்

**வி. பாஷ்யம் ஐய்யங்கார்** , இந்திய வழக்கறிஞர், நீதியாளர் (பி.1844) (இ.1908)



**வ. உ. சிதம்பரம்பிள்ளை** , இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (பி.1872) (இ.1936)



**தி. ஜானகிராமன்** , தமிழக எழுத்தாளர் (பி.1921) (இ.1982)

